Feb. 1914. | உ | Reg. No. M. 1080.

சிவமயம்.

# தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

# TAMILIAN.

## A Monthly Tamil Journal.

*Pandit, S. Muthuswami Pillai, Managing Editor.*

Vol. II | 1089 தை. | No. 5.

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | மாதசரிதம் ... ... ... | 129 |
| 2. | சஷ்டி அப்தபூர்த்தி மஹோத்ஸவம் | 130 |
| 3. | புத்தகங்களின் உற்பத்தி ... ... | 132 |
| 4. | இயற்கைப்பொருள்களின் பிரிவுகள் ... | 137 |
| 5. | ஸ்ரீ இராமலிங்கசுவாமிகளுடைய ஜீவகாருணிய போதனைகள். ... ... | 140 |
| 6. | தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் ... | 144 |
| 7. | ஜைனமதம் ... ... ... | 146 |
| 8. | தமிழர்களின் தற்கால நிலைமை ... ... | 148 |
| 9. | சமாசாரத்திரட்டு ... ... ... | 151 |


Printed at the "BHASKARA" PRESS, and
Published by S. Muthuswamy Pillai, Trivandrum.

அனேக தங்கமெடல்களும் வெள்ளிமெடல்களும்

பெற்ற டாக்ற்றா H. L. பட்லிவாலாவின்,

உலகப்பிரசித்தமான மருந்துகள்.

**Ague mixture or Pills:**—மலைசுரம், குளிர் சுரம் முதலிய எவ்வகை சுரங்களுக்கும் கைகண்டமருந்து விலை ரூ ௧.

**Haretone:**—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து விலை ரூ ௩.

**Toinc Pills:**—நரம்புத்தளர்ச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டு பண்ணும் குளிகைகள். விலை ரூபா ௧௰.

**Tooth Powder:**—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ் மருந்துகளாலும் செய்யப்பட்டது. வாய்நாற்றம் பற்புழு பற்கட்டு முதலியவைகளைத் திட்டமாய்க் கண்டிக்கும் விலை அணா ௪.
பெரிய பொட்டணம் அணா ௮.

**Ring worm Ointment:**—புழு வெட்டுக்கு மகத்தான மருந்து ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலை அணா ௪.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. H. L. Batliwalla's co,
*Warli Labaratory*, Dadar. Bombay.

---

சந்தாவிவரம்.

| | ரூ | அ | பை. |
|---|---|---|---|
| போஷகர்களுக்கு | 4 | 0 | 0 |
| சந்தாதார்க்கு | 2 | 0 | 0 |
| பினங்கு சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு | 3 | 0 | 0 |

குறிப்பு, (1) முதல் ஆறு மாதங்களுக்குள் ஒரு வருஷ சந்தா முன்னதாகச்செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும் 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒரு பிரதி இனமாகக்கொடுக்கப்படும்.

(2) அடுத்தஜனவரி மாதம் முதல் மாணவர்களுக்குப் போட்டி உபந்யாசங்கள் கொடுக்கப்படும்.

Pandit S. Muthuswami Pillai.
Managing Editor.
The "TAMILIAN"
Trivandrum.

உ

சிவமயம்.

# தமிழன்.

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"—குறள்.

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை. பத்திராதிபர்.

தொகுதி II } 1089. தை மீ { பகுதி V

## மாதசரிதம்.

செந்தமிழ்ச்செல்வர்காள்.!

இப்பத்திரிகையை முன்மாதங்களைவிட நேரத்தோடே வெளியாக்கமுடிந்ததைப் பற்றி மிகச் சந்தோஷமடைகிறேன். தெய்வ உதவியை மட்டும் நம்பி தன்னந்தனியாக உழைக்கும் எனக்கு இவ்வளவாவது சாதிக்கமுடிந்தது அருமையானதே, என்று என்னை அறிந்தோர்கள் எல்லாம் ஒத்துக்கொள்வார்கள். தெய்வ கிருபையாலும் நமது பத்திரிகாபிமானிகளின் உதவியாலும் காறக்கிரமத்தில எனது முயற்சி விளக்கமடையுமென்று நம்பப்படுகின்றது.

பத்திரிகைக்கு விஷயதானம் செய்து உதவிபுரியும்படி பல அறிவாளிகளுக்கு எழுதியிருக்கிறேன். ஸ்ரீமாந் J. பொன்னம்பலம் பிள்ளையவர்களும், ஸ்ரீமத் சுவாமி விருதை சிவஞானயோகியவர்களும், காளையார்கோவில் பிரம்மஸ்ரீ T. K. இராமபத்திரசர்மா அவர்களும், கணக்கன்பட்டி ஸ்ரீமாந் பூ. பா. செல்வக்குமார கவுண்டரவர்களும் விஷயதானம் செய்து உதவி புரிவதாக வாக்களித்திருக்கின்றனர். ஆகவே நாளடைவில் "தமிழன்" ஆராய்ச்சிவன்மையும், பொருட்பெருக்கும், சொற்சுவையுமுடைய வியாசங்களணிந்து வெளிவருவானென்று உறுதி கூறுகின்றேன்.

பத்திராதிபர்.

# பிரம்மஸ்ரீ G. சுப்பிரமணிய அய்யரவர்களின்

## சஷ்டிஅப்தபூர்த்தி மஹோத்சவம்.

சென்னையில் பிரசுரமாகும் சுதேசமித்திரன் என்ற பிரதி தினப் பத்திரிகையின் அதிபராகிய பிரம்மஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய அய்யரவர்களுக்கு, சென்னை திருவல்லிக்கேணியில் அவர்களது கிரகத்தில் வைத்து சென்ற ஜனவரி 26-வ சஷ்டி அப்தபூர்த்தி மஹோத்வம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டதென அறிந்து மிக மகிழ்ச்சியடைகின்றோம். மிகத்தாழ்வான நிலைமையிலிருந்து சுயமுயற்சியினால் மட்டும் உயர்பதவியடைந்த இந்தியப்பத்திராதிப சிரேஷ்டர்களில் இவர்களும் ஒருவர். இப்பொழுது, சென்னையில் பிரதினப் பத்திரிகையாக நடைபெறும் "ஹிந்து"ப்பத்திரிகையை இவர்கள் முதன்முதல் வாரப்பத்திரிகையாகத் தொடங்கினார்கள். அக்காலத்தில் கைம்முதலாக அவர்கள் கையில் கால் காசுகூட இல்லாமலிருந்ததாம். முதல் பிரதியின் தபாற்செலவுக்காக நான்கோ ஐந்தோ ரூபாய் ஒரு நண்பரிடமிருந்து கடனாக வாங்கினார்களாம். பொருட்பெருக்கின்றிப் பத்திரிகை பிரசுரிக்கத்தொடங்குவோர், கேவலம் சிந்தனாவாதிகள் (Idealists) என்றும் அவர்களது முயற்சி தற்கால நிலைமையில் பயன்படுவது அசாத்தியமென்றும் கூறிகைம்முதலில்லாது பத்திரிகை தொடங்கியிருக்கும் நம்மைப் பலர் அதைரியப்படுத்தினதுண்டு. ஆனால் அவ்வாறு முதலின்றி முயற்சிதொடங்கும் சிந்தனாவாதிகள் தன்னிலும் தன்முயற்சியிலும் முழுநம்பிக்கையுடைய திடசித்தர்கள் என்ற உண்மையை அவர்கள் அறிந்தார்களில்லை. இதற்கு நமது அய்யரவர்களே தகுதியான அத்தாட்சி. இந்துப்பத்திரிகையை அய்யரவர்கள்தானே தனது சுயமுயற்சியினால் பிரதி தினப் பத்திரிகையாக்கினார்கள். அய்யரவர்கள் ஆளுகையிலிருக்கும் பொழுது இந்துப்பத்திரிகைக்கிருந்த செல்வாக்கும் மதிப்பும் வியக்கத்தக்கதாகவே இருந்தன. "இந்து"வின் அபிப்பிராயங்களை அரசாங்கத்தாரும் அன்போடு ஆதரித்தார்கள். தன்னலப்பிரியர்களான பல உத்தியோகஸ்தர்களின் துர்நடத்தைகளை இந்துப்பத்திரிகை மிகத்துணிவோடு கவர்ண்மெண்டாருக்கு எடுத்துக் காட்டிற்று. இதனால் நமது அய்யரவர்களுக்குப் பல சங்கடங்களும் உண்டாயின. சத்தியமே துணையென உழைக்கும் சுதந்திரவாதிகளுக்கு அவ்வாறுண்டாதல் இயல்பே.

இந்துப் பத்திரிகையின் ஆளுகையைக் கைவிட்டபின்பு அய்யரவர்கள் "சுதேசமித்திரனை" ஒப்புக்கொண்டார்கள். தாய்ப்பாஷையான தமிழைப்பற்றிய அபிமானமோ, சுதேசவளர்ச்சியில் விருப்பமோ, பத்திரிகையினால் வரும் மகத்தான நன்மைகளைப்பற்றிய பூரண அறிவோ இல்லாத சுயநலப்பிரியர்களான தமிழர்களால் பெரும்பாலும் நிறையப்பெற்ற இத்தமிழுலகத்தில் அய்யரவர்கள் சுதேசமித்திரனைப் பிரதிதினப்பத்திரிகையாக வெளியிடமுன் வந்தது மிகத்துணிகரமான செய்கை என்று சிலர் எண்ணக்கூடும். அய்யரவர்களோ?

"எண்ணிய எண்ணியாங்கெய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப்பெறின்."

என்ற தேவர்மொழியைச் செவ்வனே உணர்ந்த மெய்ஞ்ஞானத்தனிவீரன். எண்ணத்தகுவன எல்லாம் இயற்றற்கு எளியனவே என்னும் உத்தமக்கொள்கையுடைவர். ஆகவே சுதேசமித்திரனையும் நிலைபெறச்செய்தார். ஆனால் அதற்காக அய்யரவர்கள் பட்டபாடு அற்பசொற்பமானதல்ல. தமிழ்நாட்டின் முக்கிய பட்டினங்களுக்கெல்லாம் அவர்கள் விஜயம்செய்து, ஜனத்தலைவர்களை எல்லாம் சந்தித்து, பத்திரிகையால் வரும் நற்பயனை எடுத்தோதினர். அவர்களது முயற்சியின் மகிமையினாலும் பெயரின் பெருமையினாலும் பத்திரிகையும் செவ்வையாக நடைபெற்று வருகின்றது.

தென்னாட்டில், நம்மவரது, கல்வி, செல்வ, சுதந்திர, ஆசார வளர்ச்சியின் பொருட்டு தன்னலம் துறந்து உழைத்த உத்தமசிலர்களில் தலைமையானவர் அய்யரவர்களேயாம். ஆகையால் அவர்களது பெயரைத்தமிழுலகம் உள்ளமட்டும் நிலைநிறுத்துவதற்கான முயற்சி செய்யவேண்டியதும் தமிழனாகப்பிறந்த ஒவ்வொருவனுடையவும் கடமையேயாம்.

அவர்களது மெய்யுழைப்பினால் நடைபெற்றுவரும் சுதேசமித்திரனை எக்நாளும் நடைபெறத்தக்க உந்நத நிலைமையிலாக்குவதை விட மேலான ஞாபகச்சின்னம் வேறெதுவுண்டு. ஆகையால் "சுதேசமித்திரன் ஆதரவுநிதி" என்னும் பெயரால் தமிழுலகத்தார் எல்லாம் சேர்ந்து பணம்வசூல்செய்து உதவவேண்டும். இதனால் சுதேசமித்திரன் பணமில்லாக்குறையால் வருந்துகிறதென்றும் நாமெல்லாம் உதவிசெய்யவேண்டுமென்றும் நாம கூறவில்லை. ஒருக்கால் அய்யரவர்களுக்கு இது வெறுப்பாகவும் இருக்கலாம். தமிழுலகத்தின்

நன்றியறிதலைக்காட்டுவதற்காகத் தமிழர் ஒன்றுசேர்ந்து தனசேகரம் செய்து அவர்களை ஒப்புக்கொள்ளும்படி பிரார்த்திக்கவேண்டுமென்பதே எமது விருப்பம். சாதாரணமாக பொருட்பெருக்கின்றி லௌகிகவிஷயங்கள் செவ்வனே நடைபெறா. அய்யரவர்களைப் போன்ற நல்லுழைப்பாளிகளுக்கு பொருள் இன்றியமைததாகாது. ஆனால் அய்யரவர்களின் பின்தோன்றல்களும் அவர்களைப்போல் உழைப்பாளிகளாயிருப்பார்கள் என்றெண்ணுவது அசாத்தியம். நமது தேசத்தில் ஒருவரது முயற்சி அவரோடு முடிவாவதே சர்வசாதாரணமாயிருக்கின்றது, உதாரணமாக, காலஞ்சென்ற B. M. மலபாரியால் தொடங்கப்பெற்ற Indian Spectator என்ற ஆங்கிலவாரப்பத்திரிகை இப்பொழுது நின்றுவிட்டது.

சுதேசமித்திரன் தமிழுலகத்துக்கெல்லாம் தலைவனாயிருக்கும் ஏக தினத்தமிழ்ப் பத்திரிகை. அது எந்நாளும் செவ்வையாக நடைபெறுமானால் நமக்கு அநந்தம் நன்மைகள் உண்டாம். ஆகையால் முற்கூறியபடி ஒருநிதி சேர்த்து அய்யரவர்களுக்கு அளிக்க வேண்டியது தமிழரைப்பொறுத்த கடமை.

இவ்விஷயத்தைப்பற்றிய மற்றப்பத்திரிகைகளின் அபிப்பிராயங்களும் வெகு ஆவலோடு எதிர்பார்க்கப் படுகின்றன.

பத்திராதிபர்.

---

## புத்தகங்களின் உற்பத்தி.

---

ஆங்கிலேய அரசாட்சியால் இந்தியர் அடைந்த நன்மைகளில் புத்தகமும் ஒன்றாம். சிலர் கண்ணுக்குமட்டும் எட்டுந்தன்மையிலிருந்த நூல்கள் யாவர் கண்ணுக்கும் எட்டுவனவாகி நாடெங்கும் ஞானவொளிவீசி நன்னிலைமையடைதற்கு முதற்காரணமாயுள்ளதும் புத்தகமே ஆம். ஆகையால் அதன் உற்பத்தியைப்பற்றி ஆராய்ந்தறிவதும் மிக அவசியமேயாம்.

மிகப்புராதன காலங்களில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும் கல் தூண்களிலும் பாறைகளிலும் மற்றும் உறுதியுடைய பொருள்களிலும் எழுதப்பட்டுவந்தன. மோசேக்கு உபதேசிக்கப்பட்ட பத்துக்கற்பனைகளும் கல்லில் வரையப்பட்டனவாம். சாலோமன்

அரசாது சட்டதிட்டங்களெல்லாம் பலகையில் தீட்டப்பட்டனவாகவும் சொல்லப்படுகின்றன. கிரேக்கரும் உரோமரும், யானைத்தந்தத்தாலும் உலோகங்களாலும் செய்யப்பட்ட பீடங்களில் எழுதிவந்தார்களாம். அன்றியும் பலகைகளில் மெழுகைப்பூசி அதன்மேல் எழுத்தாணியால் எழுதும் வழக்கமும் கிரேக்கருக்குள் இருந்ததாம். இவ்விதமாக எழுதப்பட்ட பலகைகள் பலவற்றை ஒன்ருய்ச்சேர்த்து இரும்புக்கம்பிகளால் இணைத்து புத்தகரூபமாக உபயோகப்படுத்திவந்தார்கள். எழுத்துக்கள் ஒன்ரேடொன்று உரைந்து பழுது படாவண்ணம் பலகையின் நாற்பக்கமும் சற்று உயரமாக வைக்கப்பட்டுவந்தது. மத்திய காலங்களில் இவ்வழக்கம் அநேகமாய் ஐரோப்பாமுழுதும் பரவியிருந்தது; பிளாரன்ஸ் பொருட்காட்சிசாலையிலிருக்கும் இத்தகைய ஒருபலகையேடு 1301-வது வருஷத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. பிற்காலங்களில் பனை தெங்கு ஈந்து முதலிய விருக்ஷங்களின் ஓலைகளும், எலுமிச்சை, அசோகு முதலிய மரப்பட்டைகளின் உட்புறமும் எழுதுங்கருவிகளாக வழங்கி வந்தன. ஈஜிப்து தேசத்திலுள்ள "பாப்பிரஸ்" என்ற ஒருவகை மரத்தின் தாளிலுள்ள ஒருவகைச் சருகின் பேரிலும் ஏராளமாக எழுதப்பட்டுவந்தது. இதனலேயே காகிதத்துக்கு ஆங்கிலத்தில் "பேப்பர்" என்னும் பெயர் உண்டாயிற்று. இது முதன்முதல் உபயோகிப்பட்டகாலம் இதுவென்று திட்டமாய்ச்சொல்ல முடியவில்லையானுலும் "ஹிரோடாற்றஸ்" காலத்துக்கு மிகமுன்னரே இம்முறைவழக்கத்திலிருந்ததாம். கிரேக்கு "பெப்பரி" 8 முதல் 12 இஞ்சும், உரோமன் "பேப்பரி" 16 இஞ்சும் நீளமுடையனவாயிருந்தன. அவைகளின்பேரில் கரிகலந்த பசைத்தண்ணீரினல் நாணலிறகு கொண்டு எழுதப்பட்டன. அவ்வெழுத்துக்களைத் துடைப்பதற்கு கடற்பாசியை உபயோகித்து வந்தார்கள். சில சமயங்களில் அவைமீது ஒருவித "வார்னிஷை"த்தடவியும் எழுதுவார்களாம். கணவாய் மீனிலுள்ள மையினுலும் முந்திரி ரசத்தினுலும் எழுதப்பட்டுவந்ததாகவும் சொல்லுகிறார்கள். பவன்மரைசிலையிலிருந்து ஒருவித சிவப்புமை உண்டாக்கி அதினுலும் எழுதிவந்தார்கள். "பாப்பிரஸ"க்குப்பின் முக்கியமாக உபயோகிக்கப்பட்டுவந்த எழுத்துப்பொருள் பதஞ்செய்யப்பட்ட ஆட்டுத்தோலேயாம், கன்றின் தோலைப்பதப்படுத்தி ஒருவித நேர்த்தியான தோற்கடுதாசி செய்யப்பட்டது. ஆசியாமைனர் நாட்டிலுள்ள "புமேனஸ்" என்ற ஒரு அரசர்தான் இவ்விதத்தோற்கடுதாசியை முதன் முதல் வழக்கத்துக்குக் கொண்டுவந்தவர். பாரசீகரும் இவ்விதத் தோற்கடுதாசியை உபயோ

கித்துவந்ததாகச் சொல்லப்படுகிறது. இக்கடுதாசிகளின் ஒருபக்கத்தில் மட்டும் முதன் முதல் எழுதப்பட்டுவந்தாலும் பிற்காலங்களில் இதன்விலை அதிகமாகவே, இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டன சிலர் எழுதப்பட்ட கடுதாசியைத்துடைத்துத் திரும்பவும் எழுதினார்கள். பஞ்சிலிருந்து உண்டுபண்ணப்பட்ட காகிதம் 9-வது நூற்றாண்டின் முடிவிலோ 10-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலோ வழக்கத்துக்கு வந்தது. ஆனால் சண நூற்கடுதாசி கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே புஸ்தகஉற்பத்திக்கு வசதியுண்டாயிற்று. சணநூல் கடுதாசி கண்டுபிடிக்கப்பட்ட காலம் திட்டமாய்த் தெரியவில்லை. [illegible]—வது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதைக்கண்டுபிடித்தவர் ஜெர்மானியர் என்று சிலரும், இத்தாலியர் என்று சிலரும், கிரேக்கர் என்று சிலரும், சீனர் என்று சிலரும், ஸ்பானியா தேசத்து சாரசர்கள் என்று சிலரும் பலர் பலவாறாகச் சொல்லுகிறார்கள். அவ்விஷயத்தைப்பற்றி ஆராய்வதில் பெரிய நன்மையொன்றுமில்லை.

புராதன காலத்துப்புத்தகங்கள் கடுதாசி உண்டுபண்ணப் பட்ட பொருள்களுக்கேற்றபடி ஏற்றத்தாழ்வுடையனவா யிருந்தன. எளிதில் வளையத்தக்க பொருள்களிலிருந்து கடுதாசிசெய்யப்பட்டபின்னர் புத்தகங்களைச் சுருளாக வைக்க சௌகரிய முண்டாயிற்று. "ஹெர்கியுலேனியம்" நூல் நிலையத்தில் இம்மாதிரிப் புத்தகங்கள் இப்பொழுதும் இருக்கின்றன. இம்முறையால் அநேக புத்தகங்களை ஒரு குழாய்க்குள் சுற்றித்திணித்து வைத்து விடலாம். இதனாலே புராதன நூல்நிலையங்கள் தற்காலத்திய நூல்நிலையங்களைப்போல் இடவிசாலமுடையனவா யிருக்கவில்லை.

ஆதியில் எழுத்துக்கள் வரிகளாகமட்டும் வகுக்கப்பட்டன; பின்னர் வரிகள்தோறும் பிரத்தியேக வார்த்தைகளாக அமையப்பெற்றன. நாளடைவில் இம்முறை மாறி பாராக்களும் அத்தியாயங்களும் தோன்றலாயின. சீனா, ஜெப்பான் முதலிய கீழைத்தேசங்களில் வலப்பக்கமிருந்துஎழுதத்தொடங்கிஇடப்பக்கம் முடிப்பதுவழக்கம். கிரேக்கர் இருமுறையும் அனுஷ்டித்து வந்தனர். அநேகமாய் எல்லாநாடுகளிலும் வரிகள் ஒன்றன் கீழ் ஒன்றாகவே செல்லும். ஆனால் சீனர்கள் கீழிருந்துமேல்நோக்கி எழுதுவர். அச்சுப்பதிப்பு கண்டுபிடிக்கப்படுமுன் மேலே கூறியமாதிரியிலுள்ள நூல்களை ஆசிரி

யரிடமிருந்து கடனாக வாங்கிப்பகர்த்தி எழுதிவந்தார்கள். இதற்குப் பிரதிபலனாக நூலாசிரியருக்கும் பகர்ப்பெழுதுவோருக்கும் ஏராளமாகப்பணம் கொடுப்பதுண்டு.

நமது இந்துதேசத்திலும் இம்முறையே அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இராமாயணம், முதலிய புராணங்களும், தேவாரம் திருவாசகம் முதலிய தோத்திரப் பாக்களும் இம்மாதிரியாகவே பகர்த்தப்பட்டு நாடெங்கும் பரவின.

புத்தக வியாபாரம் இடைக்காலத்துண்டானதே. ஐரோப்பாவிலுள்ள புராதன கவிகளும் நாவலரும் (Orators) தங்கள் கவிகளையும் பிரபந்தங்களையும் பிரசங்கரூபமாக பொதுஜனங்களுக்கு எடுத்தோதி அவைகளைப் பகர்த்தி எழுதிக்கொள்ளும்படி ஜனங்களைத் தூண்டிவந்தார்கள். நம்மவரது அரங்கேற்ற ஏற்பாடும் இக்கருத்துப் பற்றியதேயாகும்.

கிரேக்கரும் உரோமரும் நூல்நிலையங்களை இல்வாழ்க்கைக்குரிய ஸ்தாபனங்களில் முக்கியமானவைகளாகக் கருதிவந்தார்கள். ஆகவே அந்நாட்டாரனைவரும், புத்தகங்களை இன்றியமையா வீட்டுச்சாமான்களில் ஒன்றாக மதித்துப் பேணிவந்தனர். 12-வது நூற்றாண்டில் ஆக்ஸ்போர்ட் பாரிஸ், பெலோனா முதலிய நகரங்களில் புத்தக வியாபாரிகள் நிலைபெற்றனர். இந்த வியாபாரிகள் நூல்களைப் பெயர்த்தெழுதுவோரைத் தங்கள் கைச்சம்பளத்தில் நியமித்து ஆசிரியர்களிடமிருந்து நூல்களை விலைக்கு வாங்கிப் பெயர்த்தெழுதுவித்து விற்பனை செய்து வந்தார்களாம்.

தற்கால ரீதியிலுள்ள புத்தக விற்பனை அச்சுயந்திரம் நடப்பில் வந்த பின்னரே நிலைபெற்றது. ஆதிகாலத்தில் அச்சுக்கூடத்தலைவர்களே புத்தகங்களைப் பிரசுரிப்போரும் விற்போருமாயிருந்தார்கள் அவர்களுக்கு கலாசாலைப்பட்டினங்களில் ஏஜன்றுகளும் இருந்தனர்.

ஐரோப்பாக் கண்டத்தில் உண்டான சமயவழக்குகளாலும் எட்டாவது ஹென்ரியரசர் காலத்தில் உண்டான மார்க்கச் சீர்திருத்தத்தினாலும் (Reformation) புத்தகங்களுக்கு மிக்கத் தேவையுண்டாயிற்று. இங்கிலாந்தில் முற்கால அரசர்களால் அச்சுக்கூடங்களின் சுதந்திரங்களைக் குறைப்பதற்கு பல தடைகள் உண்டுபண்ணப்பட்டன. முற்காலத்தில் புத்தகங்களை அச்சிடுவதற்கு அரசாங்கத்தாரிமிடருந்து 'லைசன்சு' வாங்கவேண்டுமென்று நிபந்தனை இருந்தது. அக்காலத்தில் 'லைசன்சு' இல்லாமல் அச்சியற்றப்பெற்ற புத்தகங்களை

வாங்குவோரும் வைத்துக்கொண்டிருப்போரும் தண்டிக்கப்பட்டார்கள். அரசாங்கத்தார் இவ்வளவு முன் கருதல் செய்தும் ஜனங்களுக்கிடையில் புத்தகத்துக்குள்ள பிரியம் பெரிதாயிருந்ததினால் புத்தகங்கள் வெளிநாடுகளில் அச்சியற்றப் பெற்று இங்கிலாந்துக்கு இரகசியமாகக் கொண்டுவரப்பட்டன. கத்தோலிக்கர் புத்தகங்கள் பிரசுரிக்கும்பொழுதல்லாமல் மற்றக்காலங்களில்எலிஸபத்து இராணியார் அவ்விஷயத்தில் கவலையெடுப்பதே இல்லை. ஆகையால் அவள் காலத்தில் புத்தகங்கள் ஏராளமாய் வெளியிடப் பெற்றன. இங்கிலாந்தில் பொது ஜனாதிபத்தியம் (Common wealth) நிலைபெற்றபொழுது புத்தகங்கள் மிகுதியாக வெளிவந்தன. ஆகையால் 1653-வது வருஷத்தில் இங்கிலாந்தில் பிரசுரமாயிருந்த முக்கிய புத்தகங்களுக்கு முதன்முதல் ஒரு 'கியாட்லாகும்' வெளியிடப்பட்டது. ஜனாதிபத்தியம் நீங்கி அரசாதிபத்தியம் நிலைபெற்றவுடன் புத்தகப் பிரசுரத்துக்கும் தடை உண்டாயிற்று.

இப்பொழுது பிரித்தானியாவிலுள்ள முக்கிய பட்டணங்களாகிய லண்டன், எடின்பரோ, கிளாஸ்கோ, ஆக்ஸ்போர்ட், மாஞ்சஸ்டர், லிவர்பூல், காம்பிரிட்ஜ், டப்ளின் முதலிய இடங்களில் அனேக மொத்த வியாபாரிகள் இருக்கின்றார்கள் இவர்களைத் தவிர மாதவாரியாக புத்தகப் பிரசுரம் செய்வோரும், பழய புத்தகங்களை வாங்கி விற்பனைசெய்வோரும் ஏராளமாக இருக்கின்றனர்.

இப்பொழுது பிரித்தானியாவில் வருஷந்தோறும் 5000-க்கு மேல் புதுப்புத்தகங்கள் மட்டும் பிரசுரம் செய்யப்படுகின்றன. ஒவ்வோரு புத்தகத்திலும் பதினாயிரம் இருபதினாயிரக்கணக்காகப் பிரதிகள் அச்சியற்றப்பெறும். இவ்வாறு அச்சியற்றப்பெறும் 5000 புத்தகங்களும் அந்தவருஷத்தில்தானே 5—ம் 10—ம் முறை பதிப்பிக்கப்படும். பிரித்தானியாவில் நூலாசிரியர்களுக்கு ஒரு வார்த்தைக்கு ஒரு பவுன்வீதம் புத்தகஉரிமை கொடுக்கும் கம்பனிகளும் இருக்கின்றன. அநேகர் வர்த்தமானப் பத்திரிகைகளுக்கும், மாதாந்தப் பத்திரிகைகளுக்கும், விஷயங்களும் கதைகளும் நிருபங்களும் எழுதி மாதா மாதம் 50 -க்குமேல் பவுன் சம்பாதிக்கிறார்கள். இங்கிலாந்தில் கூலி வேலை செய்கிறவனானாலும் பத்திரிகை வாசியாதிரான். நமது தேசத்தவராகிய பாரிஸ்டர் G. P. பிள்ளை இங்கிலாந்துக்குப் போயிருந்தபொழுது கண்ட ஒரு அதிசயத்தை அவர்கள் எழுதிவெளியிட்ட "லண்டனும் பாரிசும்" என்ற புத்தகத்தில் கூறியிருக்கிறார்கள். அவர்கள் ஒருநாள் க்ஷௌரஞ் செய்விப்பதற்காக ஒரு க்ஷௌரக சாலைக்குச் சென்றார்கள். க்ஷௌரகசாலைத் தலைவன் அவர்களை உபசாரத்

தோடு அழைத்து நாற்காலியில் உட்காரவைத்து க்ஷௌரஞ்செய்யத் தொடங்கியபொழுது அவன் முகம் சடைத்திருப்பதைப் பார்த்து அதன்காரணம் யாதென்று பிள்ளையவர்கள் கேட்டார்களாம். அதற்கு அவன் சொன்ன மறுமொழி நம்மவர் கட்டாயம் அறியவேண்டியதே. அதாவது "நேற்று மாலையில் பார்லிமென்றில் நடந்த ஒரு தருக்கத்தைப் பற்றி ஒரு பத்திரிகையில் இரவு வெகுநேரம் தூங்காமல் வாசித்துக்கொண்டிருந்தேன். அதுதான் க்ஷீணத்திற்குக் காரணம்."

நமது தேசத்தைத் தலைகீழாய் மறிக்க இருக்கும் B. A M. A. B. L. பட்டதாரிகளோ எனக்குப் பத்திரிகை வாசிக்க. நேரமில்லை என்று வெட்கமின்றிச் சொல்லுகிறார்கள்.

ஐரோப்பியர்களைப் போல் பத்திரிகை வாசிப்பில் விருப்பம் நம்மவர்களுக்கு என்றுண்டாகுமோ அன்றுதான் நமது இந்துதேசம் முன்னுக்கு வரும். "லண்டன் டைமஸ்" என்ற தினசரிப் பத்திரிகையைப் பற்றி ஒரு நிருபம் வெளியிட உத்தேசித்திருக்கிறோம். அப்பொழுது ஐரோப்பியர் பத்திரிகை மீது வைத்திருக்கும் மதிப்பு நம்மவருக்கு விளங்கும்.

பத்திராதிபர்.

---

# இயற்கைப் பொருள்களின் பிரிவுகள்

---

முற்கூறியபடி இயற்கைத் தத்துவபோதத்தில் இவ்வுலகத்தினுள்ள சகல பொருள்களும் அடங்கும். எத்தனையோ லட்சக்கணக்கான பொருள்கள் இவ்வுலகத்தில் இருப்பினும் அவற்றையெல்லாம் சேதனம், அசேதனம் என்ற இரண்டு பெரும்பிரிவில் அடக்கிவிடலாம்

இவ்வாறு வகுத்த ஒவ்வொரு வகுப்பின் பெருமையையும் விளக்கிக் கூற யாரால் கூடும்? முதன்முதல் அசேதனப் பொருள்களைப் பார்ப்போம். பகலில் உயிருக்கு மூலாதாரமான கதிரவனும், இரவில் வெள்ளிமயமான சந்திரனும், மின்மினிப் பூச்சிபோல் மின்னிக்கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கான நட்சத்திரங்களும் நிறையப்பெற்றுப் பிரகாசிக்கும் நீலவர்ணமுடைய பிரமாண்டமான ஆகாய மண்டலத்தைக் கவனித்துப் பார். கோடாகோடி ஜீவராசிகளைத்

தன்னுள் அடக்கி இடைவிடாமல் சுழன்றுவரும் இப்பெரும் பிரபஞ் சத்தையும் பரிவுடன் உற்றுப்பார்! கணப்பொழுதேனும் ஓய்வில்லா மல் அசைந்தெழுந்துருண்டு புரண்டுகொண்டேவரும் ஜலாசயமாகிய சமுத்திரத்தைப் பார்! ஆகாயத்தையளாவிய மலைக்குவடுகளிலிருந்து உற்பத்தியாகி கானும், மலையும், பாலையும், சோலையும், நாடும், நகரமும் புகுந்துகடந்தோடி பெரும் பிரவாகத்தோடு பாயும் நதிகளைப் பார்! அசேதனப் பொருள்கள் இவை தாமோ? இல்லை! இல்லை!

நமது தேசத்தின் உஷ்ணம், பிரித்தானியா தேசத்தின் மத்திம உஷ்ணம், போலார் (Polar) தேசங்களின் கடுங்குளிர், காலைப்பனி, மாலைப்பனி, மூடுபனி, பனிநீர்போன்ற மழை, இறகு போன்ற மிருதுவான பனிமழை, இளந்தென்றல், கடற்காற்று, மழை வாடை, புயற்காற்று, நெருப்பு விட்டெரியும் எரிமலைகள்,. நகரங்களை யும் குடிகளையும் இமைப்பொழுதில் நசிப்பிக்கும் பயங்கரமான பூமிய திர்ச்சிகள், இவைதாமோ அசேதனப் பொருள்கள்? இல்லை! இல்லை! விளக்கிச் சொல்லச் சொல்ல விரிந்துகொண்டேபோகு மாதலால் இம் மட்டோடு முடிக்கின்றோம். ஆயினும் இவை போதாவோ? இவை நம்மை மதிமயங்கச் செய்யவில்லையா? எல்லாப் பொருள்களையும் படைத்து, ஆண்டு நடத்திவரும் சர்வ வல்லவராகிய முழுமுதற்கடவு ளின் பெருமையையும், மகிமையையும், பரிபூரணஞானத்தையும் சிற்ற றிவுடைய நாம் கற்றுணரப் போதுமான ஏதுக்கள் இவற்றுள் அடங் கவில்லையா?

* சோலையைப் பார், பகற்சோதியைப்பார், அகச்சோதியைப் பார்,
காலையைப்பார், அண்டமாலையைப் பார், புவிகாப்புடைய
வேலையைப் பார், அருள் வேலையில் வேறெதுவேனும் ஒரு
மூலையைப் பார், நின் சிறுமையும் பார், பக்திமூண்டெழுமே. 1

கானகத்தே கண்ட காட்சிகள் ஆங்கருள் காட்டியதே,
வானகத்தே மிளிர் மாட்சிகள் ஆங்கருள் மாட்டியதே,
ஊனகத்தே கொண்ட ஊக்கங்கள் ஆங்கருள் ஊட்டியதே
நானகத்தே நின்ற தோற்றமும் ஆங்கருள் நாட்டியதே. 2

---

* ஸ்ரீமாந் தி. லக்ஷ்மண பிள்ளையவர்கள் B. A. தமது நினை வாட்சி யென்னும் அழகிய நூலில் பதியின் மாட்சியைப் பற்றிப் பாடி ய பாமணிகளில் சில இந்த சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமுடையன வாகவிருப்பதால் அவற்றையிங்கே பிரசுரிக்கின்றோம்- பத்திராதிபர்.

மண்ணளித்தான், புல் மரமளித்தான், நம்மனமளித்தான்,
கண்ணளித்தான், கைகளையளித்தான், கண்கள் காணுமொளி
விண்ணளித்தான், விண்ணுமண்ணுங் கொள்கோடிவியப்பளித்தான்
தண்ணளிச் சாகரன், எண்ணருங் கோடிக்குந் தந்தையனே. 3

இப் பிரபஞ்சத்தை உற்றுநோக்கும் அறிவாளிகளுக்கு சர்வேசுவரரது திருவருட் பாங்கும் சிருஷ்டி விசேஷமும் புலப்படாமற் போகா. இது நிற்க

இவ்விடத்தில் எடுத்துப் பேசத் தொடங்கிய விஷயம் சேதனப் பொருள்களைப் பற்றியே வாகலின் அவற்றை இப்போது கவனிப்போம். சேதனப் பொருள்களென்றாலும் உயிருள்ளவையென்றாலும், அருத்தத்தில் வேறுபாடுடையவையாய்த் தோன்றினும், ஒரே விதப் பொருள்களையே குறிக்கும். அஃதெப்படியெனின், உயிருள்ள பொருள்களெல்லாம் அறிவுடையனவேயாம். மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியவைகளுக்கும் உயிருண்டென்பது மேல்நாட்டாருக்குக் கற்பிக்கவேண்டிய ஒரு விஷயமாயிருந்தாலும், நம் நாட்டவருக்கு அது சொல்லாமலே விளங்கும். இது மாத்திரமன்று. மேல்நாட்டு சாஸ்திரங்களில் அதிநிபுணராகி டாக்டர் பட்டம்பெற்ற நமது தேசவாசியாகிய போஸ் என்பவர் இப்பேர்ப்பட்ட உயிர்களுக்கு உணர்ச்சியும் உண்டென்று, உலகத்திலுள்ள இயற்கைத் தத்துவசாஸ்திரிகளெல்லாம் பிரமிக்கும்படி, தான் கண்டுபிடித்த சில அரிய துணைக் கருவிகளின் உதவியினால் ஐயமற, சென்ற வருஷத்தில் நிரூபித்துவிட்டனர். ஆதலின் மரம் செடி முதலியவற்றிற்கு உயிருமுணர்ச்சியுமுண்டென்பது தற்கால இயற்கைத் தத்துவசாஸ்திர முடிபுகளில் ஒன்றாகும்.

ஆயினும் மேற் கூறியவற்றிற்கும், பட்சி மிருகம் மனிதன் முதலிய அஃறிணை உயர்திணைப் பொருள்களின் உயிருக்கும் அறிவுக்கும் பேதமுண்டென்பதை நம்மவர்க்கு விளக்கிக் காட்டவேண்டிய அவசியமில்லை. எனெனில் முற்காலத்திலேயே பொருள்களை ஓரறிவுடையனவென்றும் 2 முதல் 6 வரை அறிவுடையனவென்றும் நம்மவர் வகுத்திருக்கிறார்கள். இயற்கைத் தத்துவசாஸ்திரங்களின் படி உயிருள்ளவைகளை தாவர வருக்கமென்றும் (Plants) ஜீவவருக்கமென்றும் (Animals) இரு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள் இவற்றுள் இப்பொழுது ஜீவவருக்கத்தைப் பற்றி பேசப் புகுவோம்.

இவ்வுலகத்தில் இப்பொழுது ஏறக்குறைய இருபதுலக்ஷம் ஜீவராசிகள் இருப்பனவாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. திமிங்கலம் யானை முதலிய மிகப் பெரிய பிராணிகள் முதல் கட்புலனுக்கெட்டாத அணுரூபமான ஜீவராசிகள் ஈறாக உள்ளவையனைத்தும், வடிவிலும், அளவிலும், நிறத்திலும், வாழ்நாள் முதலியவைகளிலும் வேறுபட்ட போதிலும் அவற்றுள் ஒவ்வொன்றும் ஈசுவரனால் தத்தமக்குக் குறிக்கப் பட்ட ஒழுங்கின்படி காலத்தையும் வாழ்வையும் கழித்துவருகின்றது. இத்தனை வகைப்பட்ட ஜீவராசிகளையும் படைத்துக் காத்து நடத்திவரும் இறைவனுடைய கருணை பொருந்திய இயற்கைச் சட்டங்களை யாவரால் அளவிட்டு முடியும்.

அடுத்த பத்திரிகையில் சீவராசிகளின் பகுதிகளைக் குறித்து எழுதுவோம்.

**Devodoss Henry. B. A. L. T,** Editor.
THE "POPULAR SCIENTIFIC JOURNAL."
**Madras.**

## ஸ்ரீமது இராமலிங்கசுவாமிகளுடைய சீவகாருணிய போதனைகள்.

(42-ம் பக்கத்தொடர்ச்சி.)

சுவாமிகள் தாம் சீவகாருணிய அறவொழுக்கத்தை அதன் இயல் வழாது பிறர்க்குவலியுறுத்திப் போதித்ததற்கேற்பவே, தாமும் மனிதர்களிடத்தும், தாழ்ந்த பிராணிகளிடத்தும் மிக இளகிய காருணிய மனமுடையவர்களாய் ஒழுகுவாராயினர். இது அவர் இயற்றிய பிள்ளைப்பெரு விண்ணப்பப் பாட்டுக்களான் நன்கு அறியப்படுகின்றது. அப்பாட்டுக்களுள் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டுகின்றேன்.

"விண்டபோதகருமறிவரும் பொருளே மெய்யனே யையனேயுலகில்
தொண்டனேன்றன்னை யடுத்தவர் நேயர் சூழ்ந்தவ ருறவினர் தாயர்
கொண்டடென் பிறந்தோ ரயலவரெனுமிக் குறிப்பினர் முகங்களினிளைப்பைக்
கண்டபோதெல்லா மயங்கியென்னுள்ளங் கலங்கியகலக்க நீயறிவாய்"

"எட்டரும் பொருளே திருச்சிற்றம்பலத்தேயிலகியவிறைவனேயுலகிற்
பட்டினியுற்றுர் பசித்தனர் களையால் பரிதவிக்கின்றனரென்றே

யொட்டிய பிறராற்கேட்டபோதெல்லாமுளம்பகீரெனத்தடுக்குற்றே
னிட்டவிவ்வுலகிற்பசியெனிலெந்தாயென்னுள்ள நடுங்குவதியல்பே."

"காவிநேர்கண்ணாள் பங்கனே தலைமைக்கடவுளே சிற்சபைதனிலே
மேவிய வொளியே யிவ்வுலகதிலூர் வீதியாதிகளிலே மனித
ராவிபோனதுகொண்டுறவினரழுதவழுகுரல் கேட்டபோதெல்லாம்
பாவியேனுள்ளம் பகீரெனநடுங்கிப்பதைத்ததுன்னுளமறியாதோ."

"நிலைபுரிந்தருளுஞ்சித்தனே யுலகினெறியலாநெறிகளிற்சென்றே
கொலைபுரிந்திட்ட கொடியவரிவரென்றயலவர் குறித்தபோதெல்லா
முலைபுரிந்திடுவெந்தீவயிற்றுள்ளேயுற்றென நடுநடுக்குற்றே
துலைபுரிந்தோடிக் கண்களைமூடித் துயர்ந்ததும் நீயறிந்ததுவே."

"காணுறுபசுக்கள் கன்றுகளாதிகதறியபோதெலாம் பயந்தே
னேணுறுமாடு முதல்பலமிருக மிளைத்தவைகண்டுள மிளைத்தேன்,
கோணுறு கோழிமுதல் பல பறவை கூவுதல் கேட்டுளங்குலைந்தேன்,
வீணுறு கொடியர் கையிலேவாளை விதிர்த்தல் கண்டென்னெனவெருண்டேன்.

"நலிதருசிறியதெய்வமென்றையோ நாட்டிலே பல பெயர்நாட்டிப்
பலிதரவாடு பன்றிகுக்கிடங்கள் பலிக்கடாமுதலிய வுயிரைப்
பொலிவுறக்கொண்டே போகவுங்கண்டே புந்திநொந்துள நடுக்குற்றேன்
கலியுறுசிறிய தெய்வவெங்கோயில் கண்டகாலத்திலும் பயந்தேன்.

[தேன்.
"துண்ணெனக்கொடியோர் பிறவுயிர்கொல்லத் தொடங்கியபோதெல்லாம் பயந்
கண்ணினாலையோ பிறவுயிர் பதைக்கக்கண்டகாலத்திலும் பதைத்தேன்
மண்ணினில்வலையுந்தூண்டிலுங்கண்ணி வகைகளுங் கண்டபோதெல்லா
மெண்ணியென்னுள்ளநடுங்கிய நடுக்க மெந்தைநின்றிருவுளமறியும்.

"தலைநெறிஞான சுத்தசன்மார்க்கஞ் சார்ந்திடமுயலுறுதந்தோ
கலைநெறியுலகக்கதியிலே கருத்தைக்கனிவுற வைத்தனராகிப்
புலைநெறிவிரும்பினாருலகுயிர்கள்பொதுவெனக்கண்டிரங்காது
கொலைநெறிநின்றார் தமக்குளம் பயந்தேனெந்தைநான் கூறுவதென்னே!

இதுவரையடியே னடைந்தவெம்பயமு மிடர்களுந்துன்பமு மெல்லாம்
பொதுவளர்பொருளேபிறர்பொருட்டல்லால் புலையனேன்பொருட்டலவிதுநின்
மதுவளர் மலர்ப்பொற் பத்ததுணையறிய வகுத்தனனடியனேன்றனக்கே
யெதிலுமோராசையிலையிலை பயமு மிடருமற்றிலையிலையெந்தாய்!

என்னளவிலையே யென்னினும் பிறர்பாலெய்திய கருணையாலெந்தா
யுன்னுறு பயமுமிடருமென்றன்னை யுயிரொடுந் தின்கின்றதந்தோ

வின்னுமென்றனக்கிவ் விடரொடுபயமு மிருக்கிலென்னுயிர்தரியாதென்
அன்னையுங்குருவு மப்பனுமான வமுதனேயளித்தருளெனையே.

இவ்வாறாகச் சுவாமிகள் அநேக விஷயங்களை அநேக பாக்களால் எடுத்துக் கூறினருக்கு விண்ணப்பித்துக் கொண்டனர். அவைகளையெல்லாம் அன்பர்கள் திருவருட்பாவில் வாசித்துக்கொள்வார்களாக. சுவாமிகள் வாசிப்போர் கேட்போர் நெஞ்சும் கனிந்து உருகுமாறு பாடிய இவ்வினிய பாட்டுக்களால் அவர் சீவர்களிடத்து எத்துணைக் காருணிய முடையவராக இருந்தாரென்பது செவ்வனே புலப்படுகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்னா வடக்கே சிவகாருணிய நல்லொழுக்கத்தை மக்களுக்கு மிகநயமாக எடுத்துப் போதித்து அவ்வொழுக்கத்தை அவ்வடநாடெங்கும் பரவச்செய்த கௌதமபுத்தருக்கு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்றும், தன்னுயிரோம்பா மன்னுயிர் முதல்வன் என்றும் கல்வியறிவுடையோரால் பெயர்கள் இடப்பட்டன. இராமலிங்கப்பெருந்தகையும் அப்பெயர்களுக்குரியவராய் ஒழுகினர் என்பது அவர்களது காருணிய செந்தமிழ்ச் செம்பாட்டுக்களை ஆழ்ந்து அறிந்தவர்கள் எல்லாருக்கும் நன்று விளங்கும்.

இராமலிங்கப் பெருமானார் தம் உயிரையும் மற்றை உயிர்களிடத்து வைத்த இரக்கத்தையும் ஒன்றாகக்கொண்டிருந்தவர். அது,

வருமுயிரிரக்கம் பற்றியே யுலகவழக்கிலென் மனஞ்சென்றதோறும்
வெருவிநின்னடிக்கேவிண்ணப்பித்திருந்தேன் விண்ணப்பஞ்செய்கின்றேனின்று
முருவவென்னுயிர் நானுயிரிரக்கந்தானென் றதேயிரண்டில்லையிரக்க
மொருவிலென்னுயிருமொருவுமென்னுள்ளத்தொருவனே நின்பதத்தாணை.

எனவும்.

தலைவர்களெல்லாந்தனித்தனிவணங்குந்தலைவனேயின்று மென்னுளமும்
மலைவிலென்னறிவு நானு மிவ்வுலகவழக்கிலேயுயிரிரக்கத்தா
விலகுகின்றன நானென்செய்வே னிரக்கமென்னுயிரென்ன வேறிலையே
நிலைபெறுமிரக்கம் நீங்கிலென்னுயிரும் நீங்கும் நின்திருவுளமறியும். எனவும

ஆதலாலிரக்கம் பற்றிநா னுலகிலாடலேயன்றியோர் விடயக்
காதலாலாடல் கருதிலேன் விடயக்கருத்தெனக்கில்லை யென்றிடலிப்
போதலாற் சிறியபோது முண்டதுநின் புத்தியிலறிந்ததுதானே
யீதலால் வேறோர்தீதெனதிடத்தேயில்லை நானிசைப்பதென்னெந்தாய்.

எனவும்

என்னையுமிரக்கந்தன்னையுமொன்றாயிருக்கவேயிசைவித்திவ்வுலகில்
மன்னிவாழ்வுறவே வருவித்த கருணைவள்ளல் நீ நினக்கிது விடயம்
பன்னலென்னடியேனுயினும் பிள்ளைப்பாங்கினுலுரைக்கின்றேனெந்தா
யின்னவாறென நீ சொன்னவாறியற்றாதிருந்ததோரிறையுமிங்கிலையே. எனவும்

அப்பெருமாள் தம் உள்ளமுருகிக் கூறினமையால் விளங்காநிற்கும்

இராமலிங்கச் செல்வனர், கடவுள் இருப்பில் முழுநம்பகமும், அக் கடவுட் பொருளினுடைய அருட்செயலாலேயே எல்லாம் நிகழ்கின்றனவென் னுங்கொள்கையும், அப்பொருளினிடத்து மிக்க மெய்யன்பும் உடையவராய் இருந்தமையால், தமக்குச் சன்மார்க்கத்தில் இருந்த ஆசைகளையெல்லாம் கடவு ளுக்கே எடுத்து விண்ணப்பித்து வேண்டுவாராயினர். அவர் கடவுளை அப்பா, ஐயா, அண்ணா, அத்தா, அரசே, அச்சா, அம்மா என்று பலவாருக விளித்து நான் உயிர்களிடத்தெல்லாம் அன்புடையவனுகி, அவைகளை இனிமையாகக் காத்தல் வேண்டும்; உலகத்தில் ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் மனவொ ருமைப் பாடுடையவராகி உலகவிஷயங்களை நடத்தல்வேண்டும்; உலகில் மக்க ளிடத்துள்ள சாதிசமய ஆசார விகற்பங்களெல்லாம் ஒழிதல் வேண்டும்; உல கில் எல்லாரும் சன்மார்க்கத்தில் ஒழுகல் வேண்டும், எல்லாரும இம்சை, கொலை புலைகளைச் சிறிதும் பொருந்தாமல் சீவர்களிடத்துக் காருணியமுடையவராய் வாழல்வேண்டும்; என்னுடைய இவ்வேண்டுதல்களை யெல்லாம் நீ கேட்டு இவ் வாறே எனக்கு உன்திரு அருள் புரிதல் வேண்டும் என்றனர். இவ்வேண்டல் கள் சுவாமிகளுடைய திருவருட்பாவில் வேண்டுகோள் என்னுந் தலைப்பின் கீழ் உள்ளன.

சுவாமிகளுடைய முக்கியக் கருத்துக்கள் உலகத்தில் எங்கும், எஞ் ஞான்றும் மக்கள்யாவரும் காருணியநெறியராய் நிற்றல் வேண்டும் என்பதும் அத ஞல் ஒற்றுமையும் ஒழுங்கும் இன்பமும் நிலைபெறல்வேண்டும் என்பதுமே யாம். அது.

கள்ளவாதனையைக்களைந்தருணெறியைக்காதலித்தொருமையிற்கலந்தே
யுள்ளவாறிந்தவுலகெலாங்களிப்புற் றோங்குதலென்று வந்துறுமோ
வள்ளலேயதுகண்டடியனேனுள்ள மகிழ்தலென்றேவெனத்துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுளமறிந்ததுரைப்பதென்னடிக்கடியுனக்கே.

என்றுஞ்சுவாமிகள் திருவாக்கினுல் நன்கு அறியப்படும். அறிவிற் சிறந்த என் அரிய சகோதரர்களே, இவ்வினிய செய்யுளின்கண் உள்ள சுவா மிகளுடைய கருத்தின் உயர்வைப் பார்மின்கள். இக்கருத்தை யாவருங்கடைப் பிடித்து ஒழுகின் உலகத்தில் ஒழுக்கின்மை ஏது? துன்பந்தான் ஏது? ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரோடு பல காரணங்களால் செய்யும் கொடுமை களும் கொலைகளும் நிரம்பிய போர்விஷயத்திலும், சுவாமிகள் ஆற்றாதிருந் தனர். அதை,

மறைமுடிவயங்குமொருதனித்தலைமைவள்ளலே யுலகரசாள்வோ
ருறைமுடிவாள்கொண்டொருவரை யொருவருயிரறச்செய்தனரெனவே
தறையுறச்சிறியேன் கேட்டபோதெல்லாந்தளர்ந்துளநடுங்கிநின்றயர்ந்தே
னிறையுமிவ்வுலகிற் கொலையெனிலெந்தா யென்னுளம் நடுங்குவதியல்பே.

என்ற அவர் விண்ணப்பச்செய்யுளால் அறிக. இற்றை நாளில் மேற்றிசையிலும், இந்தியாவிலும் உள்ள சில பேரறிவுடையோர் எங்கும் மக்களுள் சமாதானவாழ்க்கையை உண்டுபண்ணல்வேண்டுமென்று நினைந்து மிகமுயல்கின்றனர். சுவாமிளுடைய கருத்தானது தற்காலத்திலுள்ள பேரறிவுடையோர் கொள்கைக்கும், செயல்களுக்கும் பெரிதும் இணங்கி இருப்பது காண்மின்கள். இவ்வாறே சுவாமிகளுடைய ஜீவகாருணியகருத்துக்களெல்லாம் ஐரோப்பா, அமெரிக்கா வென்னுங்கண்டங்களில் உள்ள கருணையாளர் கருத்துக்களோடு சாலவும் ஒற்றுமை யுறுகின்றன. (இன்னும் வரும்)

சுவாமி உருத்திரகோடீசுவரர்.

---

# ஆப்பிரிக்காவில் இந்தியர்கள்.

---

தற்காலத்தில் தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கும் ஐரோப்பிய ஜாதியாருக்கும் அன்னியோன்ய பாவம் குறைந்து இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் இனம் 1 க்கு ௵ 1 க்கு 3 பவுன் வரி கொடுக்கவேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் யாதெனில், இந்தியர்கள் ஆரம்பத்தில் அத்தேசத்தில் கூலி வேலை செய்வதற்காக ஒப்பந்தம் செய்து அங்கேபோய் அவர்கள் கூலிவேலை செய்ய ஒப்புக்கொண்ட காலந்தீர்ந்ததன்மேல், அற்பவியாபாரம்செய்ய எத்தனிக்கிறார்கள். ஐரோப்பியச் சிறுவியாபாரிகளுக்கு ஏற்படும் லாபம் அதினால் குறைவதினால் இந்தியர்கள்மேல் துவேஷம் கொண்டு இந்தியர்கள் இன்ன இடங்களில் வாசஞ்செய்ய வேண்டுமென்றும் இன்ன இடங்களுக்குப் போகக்கூடாதென்றும் தலைவரிகொடுக்க வேண்டுமென்றும் இன்னும் மற்ற விதமாய் நிர்ப்பந்தமான சட்டங்களை தென் ஆப்பிரிக்கா ராஜாங்கத்தார் ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்தியர்களுக்குள் தலைவராக ஏற்பட்டிருக்கிறவர் ஸ்ரீமான் M. K. காந்தி என்று பேர்விளங்கிய பரோபகார சிந்தையுடைய ஒரு பாரிஸ்டர். சென்ற சில வருஷங்களாக இந்தியர்களை நிர்ப்பந்திக்க வேண்டுமென்கிற கருத்துடன் மட்டும் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை சீர்திருத்தம் செய்யவேண்டியதற்காக யாதொரு கலகம், பலாத்காரம் முதலான சட்டவிரோதமான பிரவிர்த்திகளையுஞ் செய்யாமல் இவர் இந்தியர்களை அவர்கள் செல்லக் கூடாதென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற பிரதேசங்களுக்கு கூட்டிக்கொண்டு போயிருக்கிறார்.

அதனால் இந்தியர்கள் தண்டிக்கப்படுவதும், அதனால் தென் ஆப்பிரிக்காவில் குடியேறின ஐரோப்பியருடைய நியாய விரோதமான செய்கை உலகத்தோருக்கு பகிரங்கப்படுவதும், அதின் மூலமாய் அநீதமான சட்டங்கள் மாற்றப் படுவதற்காக வேலை செய்வதும் நிகழ்ந்துகொண்டுவருகின்றன. இப்படி ஆயிரக் கணக்கான இந்தியர்கள் 'Passive Resistance' என்கிற தாரணோபாயத்தைக் கைக்கொள்ளுதலால் அனேகர் தங்களுடையதொழிலை அப்பியசிக்க முடியாமையாலும் சிலர் குற்றஞ் சாட்டப்பட்டு ஜெயிலை அடைவதாலும் இந்தியர்களுடைய ஸம்ரக்ஷணார்த்தம் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஏராளமான திரவிய சகாயம் அனுப்பப்பட்டிருக்கிறது.

கள்ளியிலிருந்து அகில் எடுக்கப்படுவதுபோலவும், சிப்பியிலிருந்து முத்து உண்டாவது போலவும், பாம்பிலிருந்து ரத்னம் உண்டாவதாகச் சொல்வது போலவும், கெடுதியிலிருந்து நன்மையானது தோன்றுவதும் இயற்கைக்கு ஒத்திருக்கிறது. இந்தியா தேசத்திலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றவர்கள் இந்தியாவிலுள்ள பல மதங்களை அநுஷ்டித்தவர்களாக விருந்தபோதிலும் பல ஜாதியைச் சேர்ந்தவர்களாயினும், அவர்கள் எல்லோரும் ஒரே முகமாய் ஒன்றுசேர்ந்து கலகாஸ்பதமான யாதொரு செய்கையையும் செய்யாமல் மனப் பூர்வமாய் கஷ்டங்களைக் கைக்கொண்டு நியாய விரோதமான சட்டங்களை மாற்ற எத்தனிப்பதானது ஈசுவர சம்மதமான வழியாயிருக்கிறது. தவிரவும இந்தியாவிலும் இந்த விஷயத்தைக் குறித்து ஜாதிமத ஆசாரம் முதலியவைகளிலே பல பிரிவுகளையுடைய இந்தியர்கள் ஒன்றுகூடி தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களிடத்தில் அநுதாபமுற்று அவர்களுக்குப் பொருளுதவி செய்ததும் இதுவரை நாம் பார்க்காத காட்சியாயிருக்கிறது. இது மூலமாய் சகோதரபாவமும் அதினுடைய லக்ஷணமாகிய அன்னியோன்யமும் விருத்தியடைந்திருக்கின்றன.

தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டார் மேற்சொல்லிய விஷயங்களை விசாரிக்க ஒரு கமிஷன் நியமித்திருக்கிறார்கள். அந்த கமிஷன் முன்பாக இந்தியர்களுடைய நன்மையைக் கவனிக்க ஒருபிரதிநிதியை இந்தியா கவர்ன்மெண்டார் அனுப்பியிருக்கின்றனர். ஷை கமிஷனைச் சேர்ந்த இரண்டு மெம்பர்கள் இந்தியர்களின் மீது துவேஷத்தை இதற்கு முன் காட்டியிருக்கிறார்களென்றும் அந்தக் கமிஷனில் இந்தியர்கள் நம்பத் தக்க இன்னும் சிலரைச் சேர்க்கவேண்டுமென்றும்

அப்படி சேர்க்காதவரையில் இந்தியர்கள் கமிஷன்முன் சாக்ஷிசொல்லக் கூடியதில்லை யென்றும் ஸ்ரீமான் M. K. காந்தி சொல்லுகின்றனர். ஸ்ரீமான் M. K. காந்தி முன்யோசனை யின்றி அவசரமாய் அபிப்பிராயப் படுகிறவரல்ல. பதட்டமாய்க் காரியம் செய்யத்தக்கவருமல்ல. இக்கமிஷன் மூலமாய் இந்தியர்களுக்கு என்ன நிகழ்வது என்று நாம் கவனிக்கத்தக்கது. (பூர்ணசந்திரோதயம்)

## ஜைனமதம்.

ஜைன சமயத்தார் அவர்களுடைய மதமே ஆதியாயிருந்ததென்றும் மற்றச் சமயங்கள் அதினின்றும் உற்பத்தியானவையென்றும் நம்பியிருக்கிறார்கள்.

ஜைனர்கள் அருகதேவனைத் தங்கள் பிரதான கடவுளாக எண்ணித் தொழுது வருகிறார்கள். இந்தத் தேவனுக்கு ஜினனென்றும் பிரசித்தமான பெயருண்டு. இப்பெயர் பற்றியே இவர்களுக்கு ஜைனர் என்று காரணப் பெயர் வந்ததாம். இந்தத் தேவனுக்கு ஆயிரத்தெட்டுத் திருநாமங்களுண்டு. எவ்வுலகமும் தொழுது வணங்கும்படியான பெருமையை யுடையவர். எவ்வகைப்பட்ட ஜீவகோடிகளும் தங்கள் தங்கள் பாஷைகளில் அறிந்துகொள்ளும்படியாக ஒரே சமயத்தில் மனோ வாக்குக் காயங்களின் சம்பந்தமின்றி கருணையுடன் சுயப் பிரயோசனத்தைக் கருதாமல் தர்மோபதேசம் செய்தருளும் பரமாசிரியர். ஒன்றை உண்டாக்குவதும் ஒன்றை இரட்சிப்பதும் ஒன்றை ஸம்ஹரிப்பது மென்ற செய்கை அவருக்கில்லை. ஜெனன மரணமில்லாதவர். எல்லாஉயிர்கள் மேலும் மிகுந்த கிருபையும் அன்புமுடையவர். முடிவில்லாத பலத்தினையுடையவர். அழிவில்லாத ஆனந்தத்தை யுடையவர். உலகத்தில் எல்லா உயிர்களும் இன்பமடையும்படி அநாதியான வேதங்கள் பன்னிரண்டையும் வெளிப்படுத்தினவர். மூன்று குடையினையுடையவர். அசோகமரத்தி னிழலின்கீழிருப்பவர். நான்கு திருமுகங்களையுடையவர்.

இந்த அருகதேவனனவர் தன்னையல்லாமல் வேறே கடவுளில்லையென்றும் தன்னைத் தொழாதவர்களுக்கு முக்தியில்லை யென்றும் எல்லா வுயிர்களும் தாம் செய்த நல்வினை தீவினைப் பயன்களைத்

தாமே அநுபவிக்குமென்றும் பாவ மிகுதியால் நரகம் புகுமென்றும் புண்ணிய மிகுதியால் தெய்வலோகம் புகுமென்றும் புண்ணியபாவமி ரண்டுங் கலந்தவிடத்து மனிதஜென்மத்தை அடையுமென்றும் பாவத் தினல் விலங்கு ஜெனனமெடுக்குமென்றும் திருவுளம்பற்றி அருளியி ருக்கின்ருர் என்றும் இதனல் இதுவே உண்மையான மதமென்றும் ஜைனர் உறுதியாய் நம்பியிருக்கிருர்கள். காலம் நித்தியமென்றும் உச்சற்பிணியென்றும் அவசற்பிணியென்றும் இருவகைப் படுமென் றுங் கூறுகிருர்கள். இவற்றுள் அவசற்பிணிகாலம், நன்னற்காலம் நற்காலம் நற்றீக் காலம், தீநற்காலம், தீத்தீக்காலம்தீக்காலம் என்று சொல்லப்பட்ட ஆறு வகையினை யுடையது. இப்படியே உசற்பிணிகா லமும் இந்த ஆறுவகையினை கீழ்மேலாக வுடையது. இந்த உச்சற் பிணிகாலம் தீத்தீக்காலந்தொடங்கிநடக்குங் காலத்தில் மனிதர்களுக்கு ஆயுளும் சரீரவுயர்வும் சுக்கில பக்ஷத்து சந்திரனைப் போல் வளர்ந்து கொண்டேவரும். அவசற்பிணிகாலத்தில் மனிதர்களுக்கு சரீரவுயர் வும் ஆயுளும் அமரபக்ஷத்துச் சந்திரனைப் போல் குறைந்துகொண் டேவரும்.

இம்மதத்தார் டில்லி, பெளிகுளம் முதலிய வடதேசங்களில் உண்டு. அவ்விடங்களில் பிரபலமான ஆசாரிய மடங்களும் இவ்வா சாரிய மடங்களில் அனேகம் விருதுகளும் பரிவாரங்களும், யானை, பல்லக்கு முதலான வாகனங்களும் மடாதிபதிகளுக்கென்று அமைக் கப்பட்டிருக்கின்றன. மற்றச் சன்னியாசிகளுக்குக் கமண்டலமும் மயில் தோகையும் இருக்கின்றன. இவர்களுக்குள்ளே வேதங்களை வாசிப்பதற்குரியவரானவர்கள் துறவறத்தாரே யொழிய இல்ல றத்தார் வாசிப்பதற்குரியரல்லவென்று சொல்லுகிருர்கள்.

யாதொரு வுயிரையுங் கொல்லாமலிருப்பதே மிகவும் பெரி தான தருமமென்றும், பொய் சொல்லாமலிருக்கவேண்டுமென்றும் பிறர் பொருளை அபகரிக்காமலிருக்கவேண்டுமென்றும் பிறர் ஸ்திரீ களை விரும்பாமலிருக்கவேண்டுமென்றும், தனதானியம் வீடு தோ ட்டம் பூமி வாகனம் உடை முதலான சகலவஸ்துக்களிலும் மிதமான ஆசை வைக்கவேண்டுமென்றும் அவர்களது வேதத்தில் கூறப்பட்டி ருக்கின்றன.

இராத்திரியில் சாப்பிடாமலிருப்பதையும் நீரை வடிகட்டிச் சாப்பிடுவதையும் மேலான தருமமாகக் கொண்டிருக்கிருர்கள். தேன் கள், சாராயம், முதலிய வஸ்துக்களைச் சாப்பிடாமலிருப்பதே விரத

மென்றுங் கைக்கொண்டிருக்கின்றார்கள். அத்திக்காய் ஆலங்காய் அரசங்காய். கோழிக்காய் புடவலங்காய். சுரைக்காய், கஞ்சா, அபினி, வெங்காயம் பெருங்காயம், வெள்ளைப் பூண்டு, இலந்தைக்காய், முள்ளங்கி, காளான், இவை முதலான பொருள்களையும் மற்றும் அதிக விதையுள்ள பொருள்களையும், இறந்த வீட்டிலும், சாப்பிடமாட்டார்கள். மாமிசம் புசிக்கவே புசியார்கள், இதுபோன்றதருமம் அனந்தம் இல்லறத்தாருக்குண்டு. இல்லறத்தில் மோக்ஷமில்லையென்றும் துறவறத்திலேயே மோக்ஷமுண்டென்றும் கூறுகின்றார்கள். ஸ்திரீ ஜென்மத்தில் மோக்ஷமில்லையென்றும் விலங்கு ஜென்மத்திலும் தேவர்களிலும் நரகர்களிலும் சூத்திரர்களிலும் மோக்ஷமில்லையென்றும் நம்பியிருக்கிறார்கள். தொடரும்

D. அகஸ்தியலிங்கம்பிள்ளை. F. T. S.

---

## தமிழர்களின் தற்காலநிலைமை.

இந்நாட்டுத் தமிழர்கள் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவற்றில் எவ்வளவு வளர்ச்சியடைந்திருக்கிறார் கள் என று இம்முறை கவனிப்போம்.

இந்நாட்டாருக்கெல்லாம் முக்கியமான ஜீவனோபாயத் தொழில் விவசாயமே. விவசாயம் என்ற தொழிலில் மேல்நாட்டார் கால் நடைகளை வளர்த்தல், கோழி தாரா முதலியவற்றைப் பேணுதல் முதலிய தொழில்களையும் உட்படுத்தியிருக்கிறார்கள். நமது நாட்டாரோ நன்செய் புன்செய்ப் பயிரிடுதலைமட்டுமே விவசாயமெனக் கொள்ளுகிறார்கள். நம்மவர்களுக்கெல்லாம் ஜீவாதாரத்தொழிலானவிவசாயத்தில் நம்மவருக்குள்ள அறிவோ பூச்சியமென்றுதான் சொல்லவேண்டும். அமேரிக்கா, ஜெப்பான் முதலிய வெளிநாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் சாஸ்திரீகவிவசாய முறைகளையும் நமது நாட்டுக் கிருஷிகர் கையாடிவரும் மாமூல் விவசாயமுறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மவர்களது வறுமைக்கும் நமது அவசியத்துக்குப் போதுமான விளை பொருள்கள் நமது தேசத்தில் உண்டாகாமலிருப்பதற்கும் காரணம் அறிந்துகொள்ளமுடியும். உழவு முதல் அறுவடை வரையிலுமுள்ள எல்லா முறைகளையும் சாஸ்திரீகமாகச் செய்தால் நாம் இப்பொழுது சாதாரணமாகச் செலவு செய்வதிலும் குறைவான தொகை செலவு

செய்து, 10 அல்லது 20 பங்கு அதிகமான இலாபத்தை அடையமுடியும். அம்முறைகள் ஒவ்வொன்றையும்விஸ்தரித்தெழுதும் இடம் இதுவன்று. நமது தற்காலநிலைமையைப் பற்றிய வியாசம் முடிவானபின்னர் அம்முறைகளைப் பற்றி எழுத உத்தேசித்திருக்கிறோம்.

இதுவன்றியும் நம நாட்டாரிடம் ஒரு பெருங் குறைபாடுண்டு. நூதன முறைகளை அநுஷ்டிக்கப் போதுமான சௌகரியங்களுடையோர் விவசாயம் செய்வது கேவலமென்றெண்ணி அத்தொழிலை அறிவில்லாதவர்களுக்குரிய தெனத் தள்ளிவிடுகிறார்கள். நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலமுடைய சீமான்கள் நிலத்தில் மிதிப்பது அந்தஸ்துக் கிழுக்கென்று எண்ணுகிறார்கள். ஆனால் சாக்ஷிகளாகவோ வாதிப் பிரதிவாதிகளாகவோ கோர்ட்டுக்குச் செல்வதும், கோர்ட்டார் அழைக்கும் வரை கோர்ட்டுக்கு வெளியிலுள்ள ஆலமூட்டிலாவது அரசமூட்டிலாவது நிழலுக் கொதுங்கியிருப்பதும், தமது நிலவரப்பில் முளைக்கும் புல்லுக்கும் ஈடாகாத மனுவெழூத்துக்காரரை அப்பா துரையே என்று நாடிபிடித்துக் கெஞ்சுவதும் அவர்களுக்கு இழுக்கில்லை. மேனாட்டவரான விவசாயப் பிரபுக்கள் Gentlemen farmers. சரிதங்களை வாசித்தறியவும் அவர்கள் முயல்வதில்லை. நம்மவர் செய்யும் பாராயண மெல்லாம் கோர்ட்டு ரிக்கார்டுகள் தானே! திருவிதாங்கோட்டில் விவசாய வசதி மிகுதியாயுள்ளது நாஞ்சினாடு. கோதையாற்றணையும் தோவாளைச் சானலும் நமது காருணிய கவர்ன்மென்றார் நம்மவர்களது நன்மைக்காகவே ஏராளமான பணச்செலவு செய்து பூர்த்திசெய்திருக்கின்றனர். அதன் பயனாக நாஞ்சினாட்டிலுள்ள காடுமேடுகளெல்லாம் நிலமாய்விட்டன. நாடெல்லாம் நிலமானாலும் நம்மவரது மூளை சீர்திருத்தம் பெறாமல் வன்காடாயிருக்கும் வரை நாமடையும் பயனென்ன? ஆகவே விவசாய விஷயத்திலும் நம்மவர்கள் காலோசிதமான முறைகளைக் கைக்கொள்ள முயலவேண்டும். அதுவிஷயமான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிக்க அவர்கள் அவாக்கொள்ளவேண்டும்.

கால்நடைகளை வளர்த்தலும் விவசாயத்தோடு பெரிதும் சம்பந்தமுடைய ஒரு தொழில். இது விஷயத்தில் நம்மவர் கவனம் செலுத்துவதே இல்லை. இதன் முறைகளையும் இலாபங்களையும் பற்றி இன்னொருமுறை விரிவாக எழுதுவோம்.

பலவகைக் கைத் தொழில்களுக்கு நம் நாட்டில் வசதிகள் இருந்தும் நவீன முறையிலுள்ள கைத்தொழிற் சாலைகள் ஒன்றாவது

நம் நாட்டில் இல்லாதிருப்பது மிகக் கேவலமானதே. நம் நாட்டுத் தமிழர்களுக்குள் முக்கியமான கைத் தொழில் நெசவுத் தொழிலே. சுதேசியக் கிளர்ச்சி யுண்டான பிறகு தன்னாட்டுச் சரக்குகளுக்குத் தேவை அதிகம் உண்டாயிற்று. இரணியல் வாலராமபுரம் முதலிய இடங்களிலுள்ள சில நல்லுழைப்பாளிகள் இத்தேவையை உணர்ந்து வெளிநாட்டாரோடு வியாபாரம் செய்யத் தொடங்கினர். அவ்வியா பாரம் இப்பொழுது ஒருவாறு நடந்துவருகின்ற தானாலும் இன்னும் அதனைப் பலவிதமாக பரிஷ்காரப்படுத்த வழிகள் இருக்கின்றன. நம் நாட்டில் நெசவாகும் சரக்குகள் வெளிநாட்டாரால் மிக மதிக்கப்படு கின்றன. புராதன முறைகளை விட்டு நவீன நெசவு மார்க்கங்களை அனுஷ்டித்து, பெருமிதமாகத் தொழில் செய்து வியாபார முறைகளை யும் அபிவிருத்தி செய்தால் நம்மவருக்கு ஏராளமான இலாபம் உண் டாகக் கூடும்.

சில மாதங்களுக்கு முன் நாகர்கோவில் கிரிஸ்தவக் கலாசாலே யில் வைத்து நடந்த ஒரு கூட்டத்தில் கிருஷிடயரக்ற்றர் டாக்ற்றர்குஞ் ஞன்பிள்ளையவர்கள் பழங்களைப் பக்குவப்படுத்தி அயல் நாட்டுக்கு அனுப்புவதினால் ஏராளமான இலாபம் உண்டாகுமென்றும் தென் திருவிதாங்கூரில் பலவித கனிவர்க்கங்களைப் பயிர் செய்விக்க வசதி யுள்ளதினால் தென் திருவிதாங்கூரார் இது விஷயத்தில் அதிகக் கவ னஞ் செலுத்தவேண்டுமென்றும் பேசினார்கள். அவர்களது வார்த்தை கள் மிகவும் மதிக்கற்பாலனவென்று யாவரும் ஒத்துக் கொள்வார் கள். அகஸ்தீஸ்வரம் தாலூகாவில் மிகச்சுவைபொருந்திய மாங்கனிகள் ஏராளமாக உண்டு. தோவாளைத் தாலூகாவில் மலைப் பிரதேசங்கள் வாழைக் கிருஷிக்கு மிகத் தகுதியுடையன. ஆகவே கனிவகைகளை சாஸ்திரீகமுறைப்படி பக்குவப்படுத்தும் ஒரு இலாபகரமான கைத் தொழிலை நம்மவர் கவனியாதிருப்பது பரிதபிக்கத்தக்கதே.

அன்றியும் நம் நாட்டுக் கருப்புக்கட்டிகள் வெளிநாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டு சீனியாக்கப் படுகின்றன. நம்மவர்கள் ஒன்று சேர்ந்து முயற்சித்தால் நம் நாட்டுக் கருப்புக்கட்டியை நம் நாட்டிலே யே சீனியாக்கலாம்.

முன் பத்திரிகையில் கூறியபடி எலும்பைப் பக்குவப்படுத்தும் கைத்தொழிலும் மிக இலாபகரமானதே. அதற்கு வேண்டிய வசதி கள் இங்கே மிக உண்டு. கைம்முதலும் அதிகம் வேண்டாம். அத்தொ ழில் கற்றவர்கள் வட இந்தியாவில் அனேகர் இருக்கிறார்கள். முயற்சிக் கவேண்டிய ஒரு குறை தான் உள்ளது.

இதுபோலவே இன்னும் பலவித கைத் தொழில்களுக்கு நம நாட்டில் சௌகரியமுண்டு. இயல்பாகவே எல்லாச் சீரும் பொருந்திய அழகிய நாட்டில் வசிக்கும் நாம், கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கழுவது போல் அஷ்ட தரித்திரராயிருப்பதற்கு யாரைக் குறை கூறுவது.

வியாபாரத்திலும் நம்மவர் அவ்வளவு பெரிய நிலைமையை அடையாவிட்டாலும் திருவிதாங்கோட்டு வியாபாரமெல்லாம் தமிழர்கள் கையிலடங்கியிருப்பது சிலாகிக்கத்தக்கதே. திருவிதாங்கோட்டில் முக்கிய வியாபாரஸ்தலங்களாகிய கோட்டயம், பாலாய், ஆலப்புழை, சங்கனசேரி, கொல்லம், திருவனந்தபுரம், குளச்சல், இரணியல், கோட்டாறு முதலிய இடங்களிலுள்ள வியாபாரிகளெல்லாம் பெரும்பாலும் திராவிடத் தமிழர்களாகவோ ஆரியத்தமிழர்களாகவோ (பிராமணர்கள்) மகமதியத் தமிழர்களாகவோ இருக்கிறார்கள். ஆலப்புழையிலும் திருவனந்தபுரத்திலும் இதர வகுப்பைச்சேர்ந்த சில பெரிய மொத்த வியாபாரிகள் இருந்தாலும் அனேகமாய் திருவிதாங்கோட்டு வியாபாரமெல்லாம் தமிழர்கள் கைக்குள்ளேயே இருக்கின்றது. திராவிடத் தமிழர்களைச் செட்டிகள் என்று கேலி பண்ணின நாயர்களும் இப்பொழுது வியாபாரஞ் செய்யத் தொடங்கிவிட்டனர். எந்தத் தொழிலிலும் பயிர்ச்சியும் பழக்கமும் இல்லாதவர்கள் பாடு திண்டாட்டந்தான், மாமூல் முறைகளை மட்டும் நாம் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தால் காலோசிதமான நவீன முறைகளைக் கற்றறிந்தோர் நம்மை ஒரு மூலையில் ஒதுக்கிவிடுவார்கள். ஆகவே வியாபார விஷயத்திலும் நம்மவர் சீர்திருந்த வேண்டுமென்பதே எமது பேராவல்.

அடுத்த முறை சமுதாய நிலைமையைப் பற்றிக் கவனிப்போம்.

பத்திராதிபர்.

## சமாசாரத் திரட்டு.

ஆறு வருஷங்களுக்கு முன் ஒரு செம்படவன் பம்பாய்க்குச் சமீபத்தில் முத்துக்குளிக்கும் இடத்தகருகில், மீன் பிடித்துக்கொண்டிருந்தான். ஒரு சமயம் வலை வீசி இழுக்கும்போது, மீன்களோடு கூட சிப்பியொன்றும் அகப்பட்டது. அதை அவன் லக்ஷியம் செய்யாமல், அன்று முழுதும் மீன்பிடித்தான். பிறகு சந்தைக்குச் சென்று

மீன்களை விற்கையில் சிப்பியும் அவற்றுடனிருக்கக் கண்டு, அதற்கும் ஒரு விலையை வைத்து விற்கலாம் என்று எண்ணி அதை எடுத்துக் கொண்டுபோய் ஒரு மார்வாரியினிடம் விலை பேசினான். மார்வாரி அணா 8-க்குமேல் கொடுக்கமுடியாதெனச் சொல்லிக்கொண்டிருக்கையில், வீதி வழியே சென்ற வேறொருவன் சிப்பிக்குள் நல்லமுத்து இருப்பதாகத்தெரிந்துகொண்டு ரூபா ஐந்து கொடுப்பதாக செம்படவனிடம் சொன்னான். பணம் கொடுத்து முடிவதற்குள் ரஸ்தாவின் வழியே சென்ற ஏகூதி ஜாதியைச் சேர்ந்த முத்து வர்த்தகன், செம்படவன் விலை பேசிக்கொண்டிருந்த சிப்பிக்குத் தான் ரூபா 200 கொடுப்பதாக முன் சென்றான். 3 அணா விலையிலிருந்து ரூபா 200 வரையில் விலையேறிவிட்டதைக் கண்ட, செம்படவன், பேராச்சரியமும், ஆனந்தமுமடைந்து, சிப்பி நல்லவிலை போகக்கூடியதென்பதைத் தெரிந்துகொண்டவனாய், உடனே பம்பாய் நகருக்கு ஓட்டம் பிடித்தான். அங்கிருந்து, கடைசியாய் ஒரு வியாபாரியால், அம்முத்து பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டது. அங்கு 6000 பிராங்க்ஸ் விலைக்கு விற்கப்பட்டதாம். செம்படவனுக்கு அத்தொகையில் பாதிக்கதிகம் கிடைத்ததென்னப்படுகிறது.

## போலீசார் அடைபட்டு விழித்தது.

மலையாளத்தைச் சேர்ந்த ஆலத்தூர் கிராமத்தில் வெள்ளை ராவுத்தன் என்னும் பெருடைய ஒருவன் வீட்டைப் பரிசோதனை போடுவதற்காக ஆலத்தூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் M. S. கேசவன்நாயர் ஒரு ஹெட்கான்ஸடேபிளையும், ஒரு கான்ஸடேபிளையும் அழைத்துக்கொண்டு மாலை 6 மணிக்குச் சென்றார். அவர்கள் ஒரு அறைக்குள் சோதனை போட்டுக்கொண்டிருந்தபோது வெள்ளை ராவுத்தன் கதவை இழுத்துச் சாத்தி வெளியே பூட்டிக்கொண்டு ஓடிப்போய்விட்டான். விடியும்வரையில் போலீஸ் உத்தியோகஸ்தர் மூவரும் அறைக்குள்ளேயிருக்கும்படி நேர்ந்தது. பிறகு வேறு போலீஸார் வந்து கதவை உடைத்து அவர்களை வெளிவரச்செய்தார்கள். ஓடிப்போன வெள்ளைராவுத்தன் இன்னும் அகப்படவில்லை.

பால்சுரக்கும் மரம்:—இது ஸ்லோன் என்னும் இலங்கைத் தீவில் இருக்கிறது. பசும்பாலைப்போல் இதன் பால் குடிக்க உதவுகிறது. இதற்கு இங்லீஷில் Cymnema lactifera எனப் பெயர்.

இந்நாட்டில் எக்ஸிகியூட்டிவ் இஞ்சினீயராயிருந்து பென்ஷன் பெற்ற பிரம்மஸ்ரீ S. E. வைகுண்டமய்யரவர்கள் சிங்கம்பட்டி திவானாக நியமனம் பெற்றிருப்பதாகக் கேட்டு மிகச் சந்தோஷமடைகிறோம்.

---

1089 மாசி 1-உ முதல் திருவனந்தபுரம் பட்டணத்திலுள்ள வண்டிகளுக்கு கவர்ன்மெண்டார் கீழ்வருகிறபடி வாடகை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

| | | 1 நாள் | $\frac{1}{2}$ நாள் | $\frac{1}{4}$ நாள் |
|---|---|---|---|---|
| (1) | 2 குதிரை கட்டின 4 சக்ர வண்டிக்கு | ரூ 6 | 4 | $2\frac{1}{2}$ |
| (2) | 1 குதிரை கட்டின 4 சக்ர வண்டிக்கு | $3\frac{1}{2}$ | $2\frac{1}{2}$ | 2 |
| (3) | 1 குதிரையாவது மட்டமாவதுகட்டின 2 சக்ர வண்டிக்கு | $2\frac{1}{2}$ | $1\frac{1}{2}$ | 1 |
| (4) | 2 காளை கட்டின 2 சக்ர வண்டிக்கு | 2 | $1\frac{1}{4}$ | $\frac{3}{4}$ |
| (5) | 1 காளை கட்டின 2 சக்ர வண்டிக்கு | $1\frac{1}{2}$ | 1 | $\frac{1}{2}$ |

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி ஒரு நாளாகவும், 3 மணிக்கூறுக்கு மேல் 6 மணிக்கூறு வரையில் $\frac{1}{2}$ நாளாகவும், 6 மணிக்கூறுக்குமேல் 12 மணிக்கூறு வரை 1 நாளாகவும், எண்ணப்படும். இரவு, பகல் வாடகையைவிட அரைப் பங்கு அதிகம் சார்ஜ் செய்யப்படும்.

---

போஷகர் சந்தாதார் வரவு கணக்கு அடுத்த முறை வெளியிடப் படும்.

---

தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் உதவிக்காக, கோட்டாறு Dr. M. E. நாயிடு அவர்கள் 100 ரூபாய் வசூல் செய்து அனுப்பியிருப்பதாக அறிந்து மிகச் சந்தோஷிக்கிறோம். இத்தகைய பொது ஜனோபகாரமான விஷயங்களில் தலையிடுவோர் நமது நாட்டில் மிக அருமையாய் இருப்பதால் நமது வாலிப டாக்டரவர்களது இப்பெருந்தகைக் குணத்தை நாம் மிகப்பெரிதும் பாராட்டுகின்றோம்.

---

மதிகெட்ட மாந்திரீகன் —பர்ட்வான் ஜில்லாவிலொரு மாந்திரீகன் செத்தவர்களை உயிர்ப்பிக்கத்தக்க மந்திரத்தைத் தன் குருவினிடமாக அறிந்துகொண்டதாக நம்பி, அதைப் பரீக்ஷிக்கும் பொருட்டுத் தன் மனைவியைக் கொன்று அவள்மேல் உட்கார்ந்துகொண்டு ஜெபஞ்செய்து பார்க்க உயிர்வராதது கண்டு பயந்தோடி விட்டானாம். இவனைப் போலீஸார் தேடித்திரிகின்றனர். இவன் மந்திர பரீக்ஷையைச் செத்தவர்களிடஞ் செய்யலாகாதா? அதற்காக ஒருயிரை ஏன் கொன்றான் மூடன்!

---

உடன்கட்டையேறி இறந்தாள்:— வங்காளத்திலுள்ள மைமென்சிங் என்ற நகரில் பாபு மனோரஞ்சன் சௌதரி என்றவர் சில தினங்களுக்குமுன் இறந்துபோய்விட்டார். சிறு பெண்ணாகிய அவருடைய மனைவி தன் தேக மெல்லாம மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு நெருப்பை வைத்துக்கொண் டுவிட்டாள். அவளுடைய உறவினர்கள் அதை அறிந்தவுடன் நெருப்பை அவித்துவிட்டபோதிலும வெந்த காயங்களினால் அந்தப்பெண் இறந்துபோய் விட்டாள். உடன் கட்டை ஏறி இறந்துபோவதைத்தடுக்க சர்க்கார் சட்டம் கடுமையாக இருந்தபோதிலும் வங்காளத்தில் இந்த வழக்கம் அடியோடு நின்று விடவில்லை, அடிக்கடி இப்படி ஸ்திரீகள் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறதாக அறிகிறோம்,

---

பள்ளிவாசல்: இங்கிலாண்டு தேசத்தில் முஸ்லீம்களின் தொகை அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. அவர்களுக்காகப் பள்ளிவாசல்களும கட்டப் பட்டுவருகின்றன. இப்போது 11 பள்ளிவாசல்களிருக்கின்றன. லிவர்ப்பூல், லோகில் என்னும் இடங்களிலிருக்கும் பள்ளிவாசல்கள் மிகவும் உன்னதமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. போலாட்டர் என்னும் ஊரிலுள்ள பள்ளிவாசல் கதவுகள் ஆக்ராவிலிருக்கும் தாஜ்மஹால் கதவுகளைப்போல் தங்கமுலாம் பூசப் பட்டிருக்கின்றன. ஈஸ்ட் எண்டு என்னும் ஊரில் ஆலி அகமத் என்னும் மகா னுக்கு ஒரு பரிசுத்தமான தர்கா ஒன்றிருக்கிறது. பக்தர்கள் சேர்ந்து வருஷ த்திற்கு ஒரு முறை கந்தூரி வைபவம் கொண்டாடி வருகிறார்கள்.

---

ஒரு இடைப்பையனின் வீரச்செயல்: கடப்பை ஜில்லாவைச் சேர்ந்த வயல்பாட் தாலுக்கா, மாரல்லா என்ற கிராமத்திலுள்ள இடைப்பையன் தினப் பிரதி கிராமததிற்கருகிலுள்ள காடுகளில் ஆடுகளை மேயவிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பது வழக்கம். திடீரென்று ஒரு தடவை சிறுத்தையொன்று காட் டிலிருந்து வெளிவந்து அதற்கு இயற்கையாயுள்ள செய்கையின்படி மந்தை யிலிருந்த ஒரு ஆட்டின் கழுத்தைக் கவ்விக்கொண்டது. ஆடு கொல்லப்படு வதைப் பார்த்த பையன் மனம் பொறுமல் சிறுத்தையைத் தாக்க ஆரம்பித்தான். உடனே அக்கொடிய மிருகம், ஆட்டை விட்டு அச்சிறுவன்மீது பாய்ந்தது. அச்சமயத்திலும் பையன் துணிகரமாய் அதை எதிர்ப்பதென்று தீர்மானித்து நின்றான். சிறுத்தை அவனது இடது கையைக் கவ்விக்கொண்டது. அப்பே தும் பையன் சும்மாயிருக்கவில்லை. இடது கையை அதற்கு ஆகாரமாகக் கொ டுத்துக்கொண்டே வலதுகையால் அதன் கழுத்தின் கீழ்பாகத்தைக் கிழித்து விட்டான். அதற்கிடையில் அவனடைந்த காயங்கள்கொஞ்சமல்ல. பையனும் சிறுத்தையும் பாலர்(Poler)ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்குக் கொண்டுபோகப்பட்டார் கள். கவர்ன்மெண்ட் இந்த ஏழைப்பையன் காட்டிய வீரச்செயலுக்காக அவ னுக்கு வெகுமதி கொடுப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

---

பூனாவில் மிஸ்டர் ராமச்சந்திர கணேஷிண்டர் பீ-ஏ, எல்-எல்-பி. என்பவர் ஒரு வீட்டிற்பிரவேசித்து 775 ரூபாய் மதிப்புள்ளநகைகளைத் திருடி னாரென்னுங் கேஸ் இம்மாதம் 19ந் தேதி பூனா சிட்டிமாஜிஸ்டிரேட் மிஸ்டர்

கிராஸ் என்பவர் முன்னர் விசாரணைக்கு வந்தது. மாஜிஸ்டிரேட் குற்றவாளிக்கு 18 மாதங் கடுங்காவற்றண்டனையும், 500 ரூபாய் அபராதமும் விதித்தார் அபராதம் செலுத்தப்பட்டால் 300 ரூபாய் வாதிக்குக் கொடுக்கவேண்டு மென்றும், அது செலுத்தப்படாவிட்டால் 6 மாதம் காவல்தண்டனை யடையவேண்டுமென்றும் உத்தரவு செய்தார்.

பொதுக்கட்டிருந்த இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகளைக் கோதுவை வைத்த குற்றத்திற்காக மாஜிஸ்டிரேட் அவருக்கு ஆறுமாதங் கடுங்காவற்றண்டனை விதித்தார்.

---

ராமநாதபுரம் ஜில்லாவில் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காகச் சென்னைக் கவர்மெண்டார், மார்ச்சுமாத முதறகொண்டு, 9 மாத பரியந்தம் 150 ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு தாசில்தரரையும், 20 ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு குமஸ்தாவையும், 35 ரூபாய்ச் சம்பளத்தில் இரண்டு ரெவினியூ இன்ஸ்பெக்டர்களையும், 7 ரூபாய்ச் சம்பளத்தில் இரண்டு பியூன்களையும். 6 ரூபாய்ச் சம்பளத்தில் இரண்டு பியூன்களையும் ரெவினியூ போர்ட்டார் செய்த சிபார்சை யங்கீகரித்து நியமித்திருக்கின்றனர்.

---

கிராகம்ஹட்சன் என்னும் ஓர் ஐரோப்பியன் வேரோர் ஐரோப்பியருடைய 50 ரூபாய் மதிப்புள்ள பெட்டியையும் உடுப்புக்களையும் திருடினனென்று இம்மாதம் 20-ந்தேதி பமபாய்ப் பிரதம மஜிஸ்டிரேட்டின் முன்னர்க் குற்றஞ்சாற்றப்பட்டான். மாஜிஸடிரேட் அவனுக்கு 7 நாள் வெறுங்காவற்றண்டனை விதித்தார்.

---

டெல்லியில் புதிதாக ஸ்தபாபிக்க வுத்தேசித்ருக்கும் ஸ்திரீ வைத்திய காலேஜ் சம்பந்தமாய் ஆரம்ப வேலைகளைச் செய்து முடிக்க, ஒரு ஸ்பெஷல் கமிட்டி லேடி ஹார்டிஞ்சால் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

---

இம்மாநம் 18-ந்தேதி ஒரு பமபாய்ப் போலீஸ் கான்ஸ்டேபில் கடலில் மூழ்கின ஒரு கிழவனைத் தீரமாகச் சென்று கரைக்கு உயிரோடு கொண்டுவந்தான். கடலில் மூழ்கியவனுடைய மூச்சுத் தம்பித்துப் போயிருந்தமையின், கான்ஸ்டேபில் அவனுக்கு மூச்சுவருபடி பல சிகிச்சைகள் செய்தான்; அவனுக்கு மூச்சுவராததுகண்டு, அவனை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோனன்; கிழவன் வழியிலேயே இறந்து போனன்.

---

வெளியூர் ரயில்வே ஸ்டேஷன்களி லிருந்தனுப்பம்பட்ட சவரன்களைத் திருச்சினப்பள்ளி ரயில்வே ஸ்டேஷனிலிருக்கும் ஹெட்காஷியர் ராவ்பகதூர் மிஸ்டர் நாராயணராவ் சென்றமாதம் 28-ந்தேதி சோதித்துப் பார்த்தபோது, அச்சவரன்கள் மாற்றப்பட்டனவென்றறிந்து மதுரை, ஈரோடு, ஷோரனூர் ஒலவக்கோடு என்னும் ரயில்வே ஸ்டேஷன்களில் அதுபற்றி விசாரிக்கும்படி செய்தார். இப்போது அது சம்பந்தமாகப் பாங்கி ஏஜெண்டான பஞ்சாபகேச அய்யர், போலீஸ் சப் இன்ஸ்பெக்டரா யிருந்து நீங்கிய சி. வெங்கடராயரென்

னுமிருவர் கைது செய்யப்பட்டு விசாரணையிலிருக்கின்றனர். இன்னொருவரும் இதிற் சம்பந்தப்பட்டிருக்கிறாரென்று சொல்லப்படுகின்றது. இவர் பலப்புரம் ஸப்கலெக்டர் முன் விசாரணைக்குக் கொண்டுவரப்படுவார்.

---

மூன்று மாதங்களுக்கு முன் ஆஸ்திரியா தேசத்தில் பிரேக் என்னுமூரிலிருக்கும் ஆஸ்பத்திரியில் 16 வயதுள்ள ஒரு பெண் தனது வலக்கையில் ஒரே எலும்பு கெடுதியடைந்திருப்பதுபற்றிச் சிகிச்சை செய்து கொள்ளவந்தாள். அங்குத்தானே தன்னைத்துப்பாக்கியாற் சுட்டுக்கொண்டு காயமடைந்து சிகிச்சைக்குக்கொண்டுவரப்பட்டு இறந்துபோன ஒரு ஸ்திரீயின் வலக்கையின் எலும்பையெடுத்து, அவளது பழுதுப்பட்ட எலும்பிற்குப் பதிலாகவைத்துச் சிகிச்சை செய்யப்பட்டது. அவள் சௌக்கியமடைந்து, முன்போல வலக்கையை யுபயோகித்துவருகினறாள்.

---

இடிலபூர் ஸ்கூலில் வாசிக்கும் 13-17 வயதுள்ள இரண்டு மாணவர்கள் 8 வயதுள்ள ஒரு சிறுவன் கழுத்தில் பொன் சங்கிலி போட்டிருப்பதைக் கண்டு, அவனை அவனோடு விளையாடியிருந்த 9 வயது பையனோடு சமீபத்திலுள்ள ஒருகாட்டிற் கூத் தூக்கிக் கொண்டுபோய் அவ்விருவரையும் கொலை செய்துவிட்டு, பொன் சங்கிலியை யபகரித்துக்கொண்டனர். இக் கொலை விஷயத்தை 13 வயதுள்ள மாணவன் வெளிப்படுத்திவிட்டான். கேஸ் விசாரணையிலிருக்கிறது. 9 வயதுள்ள பையனைக் கொலை செய்தமைக்குக் காரணம் அவன் நகை தரித்திருந்த பையனைத் தூக்கிக் கொண்டுபோனதை வெளிப்படுத்தி விடுவானென்னும் பயத்தாலாம்.

---

பம்பாயில் ஒரு விதவா விவாகம்:— பம்பாய் பகவன்காஸ் மகோதாஸ் வீட்டின் சமீபத்தில் ஒரு விதவா விவாகம் நடைபெற்றது. இதில் 29 வயதுள்ள மிஸ்டர் லெக்ஷ்மணரால் கெய்க்கினி என்பவருக்கும் 21 வயதுள்ள ஒரு விதவைப் பெண்ணுக்கும் விவாகம் நடந்தது. மிஸ்டர் கெய்க்கினி அவர்கள் சென்ற 6 வருஷகாலமாய் ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா சொசைடியில் வேலை பார்த்தவர். இக் கலியாணத்திற்கு அநேகர் விஜயஞ் செய்திருந்தனர்.

---

பித்தாபுரம் ராஜா தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் கஷ்ட நிவர்த்தி நிதியின் பிரிவாகக் காக்கிநாடாவிலிருக்கும் கம்மிட்டிக்குப் பதினாயிரம் ரூபா நன்கொடையளித்திருக்கிறார் என்று அறிந்து சந்தோஷிக்கிறோம். இவருடைய தாராள சிந்தையும் தேசாபிமானமும் நம்மவர்கள் அனைவராலும் பாராட்டத் தகுந்தன.

---

## கோடீசுவரரான அண்ட்ரூ கார்னிகி அவர்களின் அபிப்பிராயங்கள்.

இந்தப் புண்யவான் கலிகால கர்னனென்றழைக்கப்பட்டவர். இவரிடம் ஓர் பத்திரிகாப்பிரதிநிதிபேசிக் கொண்டிருக்கையில் இவர் தெரிவித்த விஷயங்கள்.

"நான் சிறுவனுயிருக்கையில் ஓர் பத்திரிகையின் பிரதிநிதியாக வெண்ணினேன். அது முடியாமல் பருத்திக்காரி யாலயத்தில் சேர்ந்தேன். அங்கிருந்து பல வியாஸங்களை எழுதி அனுப்புவேன். இப்பொழுதும் அனுப்பிவருகிறேன். எனக்கு எழுதிவெளியிடுவதில் அதிகஸந்தோஷம்.


"பிரபுக்கள் தங்கள் பணத்தை எவ்விதம் செலவழிக்கவேண்டுமென்றால் உத்தியோகஸ்தர்களுக்கு தனஸகாயம் செய்யவேண்டும். பிழைத்திருக்கையில் எந்தப்பணத்தால் நமக்கு நன்மைகளை உண்டாக்கிக் கொள்கிறோமோ அத்தகைய திரவியத்தை, உயிரினும் மேலாக எண்ணியிருந்ததனத்தைப் பிரிந்து மரணமடைவது வெட்கத்தைத் தருகிறது. அதைக் காத்துக்காப்பாற்றுவதால் வரும் பிரயோஜனமென்ன? நாம் இறந்து பாத்யஸ்தருக்கு அதைக் கொடுப்பதில் வரும் பலனென்ன?"

"ஜெகத்தில் பொறுமை இருக்கவேண்டும் என்ற விஷயமாய் நான் ஜெர்மன் சக்கர்வர்த்திக்கு எழுதிக்கொண்டிருக்கிறேன். அவர் அதைப்பற்றியோசிப்பாரென்றநம்பிக்கை எனக்குண்டு மனிதர்கள் நரர்களைக் கொல்வது மகாபாதகமாயிருக்கிறது. இத்தகையகாரியங்கள் எதுவரையில் நடக்கின்றனவோ அதுவரையில் நம்மை நவநாகரீகர்களென்று சொல்லிக் கொண்டாலும் பசுவிருத்தியிலிருக்கிறோமென்ற விஷயங்களை பத்திரிகைகள் எடுத்துரைத்து படிப்பவர்களின் மனதில் பதியும்படி செய்யவேண்டும். ஜெனங்களுடைய அபிப்பிராயங்கள் வெளியாகும். மனிதர்களின் உயிரை வாங்குவது நன்மையல்லவென்பது எல்லோருடைய ஆலோசனைக்கும் எட்டும். சௌர்யமென்றால் ஜெனங்களை ரக்ஷிக்கவேண்டுமேயன்றி கொல்வதற்கல்ல. இது மனிதர்களின் மனதில் எத்தனை சீக்கிரத்தில் படுமோ அத்தனை துரிதத்தில் அதிகஸௌகரியமும் கிடைக்கும்.

இந்த ஸ்ரீமான் செய்துள்ள உபகாரமும், திரவியஸகாயமும், கோடி கோடியாய்க்கணக்கிடப்பட்டுள. இவருடைய புத்தி, வாக்சாதுர்யம் காருண்யம் முதலியவைகள் புகழக் கூடியவைகள். லோகோபகாரத்தில் சிரத்தை கொண்டு உழைப்பவர்களில் இவர் முதன்மையானவர். (ஹிதகாரிணி.)

**Established 1893.**

**Ananda Flute Harmonium**



GUARANTEED FOR 3 YEARS.

Many ask why **Ananda Flute** is the cheapest and best? Because it is manufactured by Mr A. P. Dey the renowned tuners who had been awarded Gold Medal and 1st class certificate from the Indian Industrial Exhibition of 1900 This instrument is made of teak wood and of good accessories and is fitted with all the latest improvement and is of machine made. Price will be suited to all. Trial Order Solicited.

3 oct. 1 set of reed C to C Rs 1 /- 17- and 20/-
Do. 2 sets of reed Do. Rs. 27/- 30/- and 35/-
Each order must accompany Rs. 5/- in advance

Apply to the Manager—
**A P. Dey & Co.**
*22/2 (T) Budhoo Ostagor's Lane, Calcutta.*

ஏஜண்டுகள் தேவை.

# இது ஒரு நல்ல சமயம்.

நமது பத்திரிகைக்குச் சந்தாதாரைச் சேர்க்க ஏஜண்டுகள் தேவை. தகுதியுடையவர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பத்திராதிபர்.

## மாணவர்களுக்கு

# போட்டி உபந்யாசங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | அச்சுயந்திரத்தின் உற்பத்தியும் அதன் வளர்ச்சியும். | மாசி |
| 2. | இப்பொழுது ஜீவித்திருக்கும் ஏதேனுமொரு தென்னிந்திய சிரேஷ்டரின் ஜீவித சரித்திரச்சுருக்கம் | பங்குனி. |
| 3. | தென்னிந்தியாவிலுள்ள ஏதேனுமொரு பட்டணத்தின் சரித்திரம் | சித்திரை |

(a) இவ்வியாசங்கள் அந்தந்த மாதம் 20-உ க்கு நமக்குள் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

(b) காகிதத்தின் ஒரு பக்கம் தெளிவாயெழுதப்பட்டிருக்க வேண்டும். புல்ஸ்கேப் 12 பக்கங்களுக்கு மேற்படக் கூடாது.

(c) ஒவ்வொரு உபந்யாசத்தோடும் 4 அணா தபால் ஸ்டாம்பும் அந்தந்த ஸ்கூல் தமிழ்ப் பண்டிதரிடமிருந்து ஒரு நற்சாட்சிப் பத்திரிகையும் அனுப்பவேண்டும்.

(d) பரிசுபெறும் வியாசத்தைப் பற்றிய சகல உரிமைகளும் நமக்கேயாகும்.

(e) ஜெயம்பெறும் மாணவருக்கு 1 ரூபாய் முதல் 2 ரூபாய் வரை விலையுள்ள தமிழ்ப்புத்தகங்கள் பரிசளிக்கப்படும்.

**S. முத்துசுவாமிப்பிள்ளை,**

"தமிழன்" பத்திராதிபர்,

திருவனந்தபுரம்

**Rare and Valuable Books.**

1. Wizard's Manuel;—new Edition.

The greatest book ever issued of its kind, a complete compendium of the secrets of the Magican, Mind reader and Vantriloquirt fully explained and illustrated price Rupee one. reduced price annas twelve only inclg V. P.

2. **Mesmerism and clairvoyance.**

This book is a complete exposition of the Wonderful and Mysterious Science of Mesmerism, Hypnotism Clairvoyance and mind reading.


Price Rupee one. Reduced Price annas twelve, inclg V. P.

3. Silent Helper or the money making Secrets.

This book contains large and valuable receipes and farmulas for the manufacture of various articles in daily use such as Perfumery, Soap, Hair oil &c. Price Rupee one. reduced price annas twelve only.

**Y. Paul & Co.,**
17, Kupalitola lane,
**Calcutta.**

---




Just the thing you want. One pocket press with the following letter attach case. Most strong! Most usefull Most elegant!

Made of solid ebonised highly polished case. Mahagony color size 9×6×4 contg: 3 Trays for the following (1) newly invented ever ready pen, positive proof against leakage as clean as pencil in use, can be refilled with any ink and nib (2) 1 well shapened bone handled pen knife (3) 1 Dozen parchment letter paper (4) 1 Dozen post card (5) 1 Dozen envelope (both ivory finish) (6) 1 sheet blotting (7) 1 packet pin (8) 1 free saving guide (9) 1 complete letter writer (10) 1 pocket press for printing letter heading and visiting cards &c. can be changed thousands of times. price with all the presents Re 2/8/- only. Post free

Apply to S. Seal & Co. 17 Kepalee tola, Calcutta.